ජාතික සමාජ සංවර්ධන ආයතනය
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்
NATIONAL INSTITUTE OF SOCIAL DEVELOPMENT



# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# ANNUAL REPORT
# 2024



ග්‍රාමීය සංවර්ධන, සමාජ ආරක්ෂණ සහ ප්‍රජා සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு
Ministry of Rural Development, Social Security and Community Empowerment

# தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

## கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு

### பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குவின் கீழ் பட்டம் வழங்கும் நிறுவனம்

# வருடாந்த அறிக்கை - 2024

# உள்ளடக்கம்


| | | பக்க இலக்கம் |
|---|---|---|
| 01. | வருடாந்த அறிக்கை 2024 | |
| | 1.1 அறிமுகம் | 1 - 2 |
| | 1.2 நிருவாக சபை | 3 |
| | 1.3 கல்விசார் நடவடிக்கைகளுக்கான சபை | 4 |
| | 1.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு | 4 - 5 |
| | 1.5 உத்தியோகத்தர்கள் | 5 - 7 |
| 02. | பிரிவுகளின் முன்னேற்றம் | |
| | 2.1 நிருவாகம் மற்றும் நிதிப் பிரிவு | 8 |
| | 2.2 சமூகப்பணிக் கல்லூரி | 9 - 17 |
| | 2.3 பயிற்சிப் பிரிவு | 18 - 31 |
| | 2.4 சமூக அபிவிருத்தி கொள்கை, ஆய்வு மற்றும் வெளியீட்டுப் பிரிவு | 32 - 37 |
| | 2.5 தர உறுதிபடுத்தல் நிலையம் | 38 - 46 |
| 03. | இறுதிக் கணக்கு – 2024 | 47 - 70 |
| 04. | கணக்காய்வாளர் அறிக்கை | |
| | 4.1 கணக்காய்வாளர் அறிக்கை | 71 - 72 |
| | 4.2 இறுதிக் கணக்கு தொடர்பான கணக்காய்வாரள் அபிப்பிராயம் | 73 - 77 |
| | 4.3 கணக்காய்வாளர் அறிக்கை தொடர்பான பணிப்பாளர் நாயகத்தின் கருத்துக்கள் | 78 - 81 |

# தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

## தொலைநோக்கு

"சமூகப்பணிக் கல்வி பயிற்சி மற்றும் ஆய்வு என்பவற்றை வழங்குவதில் உள்நாட்டு, சர்வதேச மட்டத்தில் கேந்திர நிலையம் என்றவகையில் அனைவரின் வாழ்க்கைத்தரத்தில் பண்புசார் அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்கான செயற்திறன்மிக்க பங்குதாரராக ஆகுதல்."

## பணித்திட்டம்

"எல்லா சமூக மட்டத்திலும் பணிபுரியக்கூடிய நிபுணத்துவமிக்க சமூகபப்ணியாளர்களை பயிற்றுவிப்பதன் ஊடாக சமூக அபிவிருத்திக்கு தேவையான மனித வளத்தை முன்னேற்றுவதும் சமூகப்பணி பரீட்சயத்திற்கு தேவையான புதிய அறிவு மற்றும் நுட்பத்தினை வளர்ப்பதும் மற்றும் அதனை பரவலடையச் செய்வதன் ஊடாக சமூக நலன்புரிக்கும் சமூக அபிவிருத்திக்கும் தேவையான வாண்மையாளர்களின் சேவையினை வழங்குவதுமாகும்".

# பொழிப்புரை

கிராம அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் செயற்படுகின்ற தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், சமூகப்பணிக் கல்வியினை (Social Work) வழங்கும் இலங்கையிலுள்ள ஒரேயொரு கல்வி நிறுவனமாகும். இந்நிறுவனம் 1978ம் ஆண்டு 16ம் இலக்க பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் 25ஏ உறுப்புறையின் கீழ் பட்டம் வழங்கும் அதிகாரமுள்ள நிறுவனமாக 2005ம் ஆண்டில் பிரகடனப்படுத்தப்பட்டது அதற்கேற்ப 2005ம் ஆண்டு சமூகப்பணி பட்டத்தினையும் 2008ம் ஆண்டு சமூகப்பணி பட்டப்பின் படிப்பினையும் வழங்கும் அதிகாரத்தினையும் வழங்கப்பட்டுள்ளது. நிறுவனத்தினால் செயற்படுத்தப்படுகின்ற அனைத்து பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்பு, உயர் டிப்ளோமா, டிப்ளோமா, சான்றிதழ் கற்கைநெறி மற்றும் பயிற்சிகளும் ஆய்வுகளும் தேசிய தேவையின் நிமித்தம் அதற்கு பொருந்தக்கூடியவாறு தேவை மதிப்பீட்டு அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பாட விதானம் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் சிபாரிசுக்கேற்ப (SLQF) தொழில்வாண்மையாளர்கள், துறைசார் அறிஞர்கள், கல்விமாண்கள் மற்றும் உள்ளக உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் உயர் தரத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது

சமூக அபிவிருத்திக்காக சமூகப்பணி, சமூக நலன்புரி, சமூக அபிவிருத்தி, உளவியல் உளவளத்துணை சமுதாயஞ்சார் சீர்த்திருத்தத் திணைக்கள உத்தியோத்தர்களுக்கான டிப்ளோமா பாடநெறிகளை பலவற்றை நடாத்திவருகின்றது. மேற்குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு சமூகப்பணிக் கல்லூரி, பயிற்சிப் பிரிவு, மற்றும் ஆய்வுப் பிரிவு என தற்போது மூன்று கல்விப் பிரிவுகள் நடாத்தப்பட்டு வருவதுடன் அது தவிற நிதி மற்றும் நிருவாகப் பிரிவும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

சமூகப் பணி இளமாணி மற்றும் சமூகப் பணி முதுமாணி பட்டப்படிப்புகள் சமூகப் பணி கல்லூரியால் நடத்தப்படும் முக்கிய நிகழ்ச்சித்திட்டங்களாகும். அதற்கு அப்பால், சமூகப் பணி உயர் டிப்ளோமா மற்றும் சமூகப் பணி டிப்ளோமா பாடநெறிகள் நடத்தப்படுகின்றன. இப் பாடநெறிகளின் சிறப்பு என்னவென்றால், கோட்பாட்டு அறிவுடன் நடைமுறை களப் பயிற்சியின் அடிப்படையில் திறன்களை வளர்ப்பதாகும். பயிற்சிப் பிரிவு அம்பாறை, தலாவ, கிளிநொச்சி ஆகிய பிரதேச வள நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு குறுகிய கால மற்றும் நீண்ட கால பயிற்சித் திட்டங்களையும், டிப்ளோமா, சான்றிதழ் படிப்புகள் மற்றும் குறுகிய கால பயிற்சித் திட்டங்களையும் நடத்துகிறது. மேலதிகமாக, தீவு முழுவதும் உள்ள அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப சமூக அபிவிருத்தித் துறையில்ஈடுபடும் உத்தியோகத்தர்களின் திறன்களை வளர்ப்பதற்கான பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மேலும், பல உளவளத்துணை டிப்ளோமா பாடநெறிகளும் உளவளத்துணை உயர் டிப்ளோமா பாடநெறிகளையும் கட்டணம் வசூலித்து நடாத்தும் பாடநெறிகளாக காணப்படுகின்றன. உளவளத்துணையில் உயர் டிப்ளோமா பாடநெறியைத் தொடங்கி அதை பட்டப்படிப்பாக மேம்படுத்த தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன, மேலும் தற்போதைய பாடத்திட்டம் உயர் கல்வி அமைச்சகத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சமூக அபிவிருத்தி கொள்கை, ஆய்வு மற்றும் வெளியீட்டுப் பிரிவினால் ஆய்வு மற்றும் ஆக்கங்களை வெளியிடுதல், மாநாடு நடாத்துதல் என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பிரிவினால் இவ் ஆய்வுகளை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள ஆய்வு அறிக்கைகள் மற்றும் நூல்கள் சமூக அபிவிருத்தி மற்றும் சமூக நலன்புரி துறைகளின் அபிவிருத்திக்கு பெரிதும் பயன்படுத்தக்கூடியதாக உள்ளது. நிறுவனத்தின் கல்வித் திட்டங்களின் தரத்தைப் பராமரிப்பதை எளிதாக்கும் வகையில், மேற்கண்ட முக்கியத் துறைகளுக்கு மேலதிகமாக, தர உறுதிப்படுத்தல் மையம், சமூகப் பணிப் பிரிவு, மானுடவியல் மற்றும் முதுமையியல் பிரிவு, சமூகவியல் மற்றும் சமூக அபிவிருத்திப் பிரிவு, உளவளத்துணை மற்றும் உளவியல் பிரிவு, மாணவர் நலன்புரி பிரிவு, பாடத்திட்ட தயாரிப்பு மையம் மற்றும் பால்நிலை சமத்துவ கற்கைக்கான மையம் போன்ற பல கல்விப் பிரிவுகள் மற்றும் கல்வி ஆதரவு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

நிறுவனத்தின் மூன்று பிரதேச பயிற்சி நிலையங்கள் அநுராதபுரம் - தலாவை, அம்பாறை, மற்றும் கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் ஆரம்பிகப்பட்டுள்ளன. சீதுவை லியனகேமுல்லையை மையமாகக்கொண்டு நடாத்தப்படும் நிறுவனத்தின் நிகழ்ச்சிகளை நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகத்தினர் மத்தியில் கொண்டு செல்வதனை நோக்கமாகக்கொண்டு இப்பிராந்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அவ்வாறே இந்நிறுவனத்திற்கான 100,000 அடி வர்க்கத்தில் நிலையான கட்டடத்தொகுதியானது சீதுவை பிரதேசத்தில் நிர்மானிக்கப்பட்டு வருவதுடன் அது தற்போது 98.19% நிறைவுசெய்யப்பட்டுள்ளது. இந்த கட்டிடத்தொகுதியின் நிர்மானப்பணிகள் நிறைவடைந்ததும் நிறுவத்தின் பாடநெறிகளுக்கு இணைத்துக்கொள்பவர்களின் எ்ணணிக்கை அதிரகரக்க வாய்ப்பு கிடைக்கும் என்பதுடன் நாட்டில் உள்ள தேவைக்கேற்ப புதிய பாடநெறிகள் ஆரம்பிப்பதற்கும் நடாத்திச்செல்வதற்கும் வாய்ப்பு உள்ளது.

நிறுவனத்தின் சமூகப் பணி பபட்டப்பாடநெறிகளை வெற்றிகரமாக முடிக்கும் பட்டதாரிகளுக்கு தொழிற் சந்தையில் அதிக கேள்வி உள்ளதுடன் குறிப்பாக ஆஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகளில் சமூகப் பணி நிபுணர்களாகவும் பணிபுரிகின்றனர். இது தனிப்பட்ட வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல் நாட்டின் அந்நியச் செலாவணி வருவாயிலும் பங்களித்துள்ளது. மேலும், எங்கள் நிறுவனத்தின் பட்டதாரிகள் அரசு மற்றும் அரசு சாரா துறைகளில் வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளதுடன் மேலும் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக தங்கள் தொழில்வாண்மைத் திறன்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

தற்போது, நிறுவனத்தை பல்கலைக்கழகமாக தரமுயரத்துவதற்கான ஆரம்பப் பணிகள் நடந்து வருகின்றன. அதே நேரத்தில், புதிய பட்டப்படிப்பு திட்டங்களைத் ஆரம்பித்தல் உட்பட கல்வி வசதிகளை நிறுவுவதற்கான பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் உயர்கல்வியை அணுகுவதற்கான வாய்ப்பை விரிவுபடுத்தும். எங்கள் அனைத்து கல்வித் திட்டங்களின் சிறப்பையும் உறுதி செய்வதற்காக SCAQA (அங்கீகாரம் மற்றும் தர உறுதிப்பாட்டிற்கான நிலைக்குழு) மேற்பார்வையிடும் தர உறுதி செயல்முறையை நாங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளோம். இந் நிறுவனம் அதன் 72 ஆண்டுகால வரலாறு முழுவதும் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதில் பாராட்டத்தக்க பங்களிப்பைச் செய்து வருகிறது.

பேராசிரியர் டீ. ஏ. பிரமேகுமார த சில்வா
பணிப்பாளர் நாயகம் (ப.க)
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

# தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

# 01. ஆண்டறிக்கை - 2024

## 1.1. அறிமுகம்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனமானது. கிராம அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் செயற்படுகின்ற உயர்கல்வி நிறுவனமாகும். தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் சமூக அபிவிருத்தி, சமூக நலன்புரி மற்றும் சமூக வலுவூட்டலுடன் தொடர்புள்ள சமூகப்பணி பட்டம், பட்டப் பின் படிப்பு மற்றும் சமூகப்பணி டிப்ளோமா மற்றும் உளவளத்துணை டிப்ளோமா பாடநெறியினை நடாத்திச் செல்கின்றது. அது 1992ம் ஆண்டு 41ம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன சட்டத்தின் ஒழுங்குவிதிகளின் கீழ் செயற்பட்டு வருவதுடன் இலங்கை சமூகப்பணி கல்வியினை வழங்கும் ஒரேயொரு அரச நிறுவனமும் இதுவாகும். சமூகப்பணிக் கல்வியினை முன்னேற்றும் நோக்கில் 2005ம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோசலிஸ குடியரனால் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழவின் சிபாரிசின் பேரில் 1978ம் ஆண்டு 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 25 ஏ, பந்தியின் கீழ் பட்டம் வழங்கும் நிறுவனமாக பிரகடனப்படுத்தப்பட்டதன் ஊடாக சமூகப்பணி இளமாணிப் பட்டம் மற்றும் சமூகப்பணி முதுமாணி பட்டம் வழங்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## எமது தொலைநோக்கு

"சமூகப்பணிக் கல்வி பயிற்சி மற்றும் ஆய்வு என்பவற்றை வழங்குவதில் உள்நாட்டு, சர்வதேச ரீதியில் சிறப்புமிக்க கேந்திர நிலையம் என்றவகையில் அனைவரதும் வாழ்க்கைத் தரத்தில் பண்புசார் முன்னேற்றத்தினை ஏற்படுத்துவதற்கான செயலூக்கமுள்ள பங்காளனாக ஆகுதல்."

## பணித்திட்டம்

"எல்லா சமூக மட்டத்திலும் பணிபுரியக்கூடிய நிபுணத்துவமிக்க சமூகப்பணியாளர்களை பயிற்றுவிப்பதன் ஊடாக சமூக அபிவிருத்திக்கு தேவையான மனித வளத்தை முன்னேற்றுவதும் சமூகப்பணி பரீட்சயத்திற்கு தேவையான புதிய அறிவு மற்றும் நுட்பத்தினை வளர்ப்பதும் மற்றும் அதனை பரவலடையச் செய்வதன் ஊடாக சமூக நலன்புரிக்கும் சமூக அபிவிருத்திக்கும் தேவையான வாண்மையாளர்களின் சேவையினை வழங்குவதுமாகும்".

### நோக்கம்

1992 இன் 41ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு நிறுவனத்தின் நோக்கங்களாவன,

(அ) சமூகப்பணி மற்றும் சமூக நலன்புரிக் கல்வியை அபிவிருத்தி செய்வதற்காக திட்டங்கள் நிகழச்சிகள், மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் கௌரவ அமைச்சருக்கு வழங்குதல்.

(ஆ) சமூகப்பணி மற்றம் சமூக அபிவிருத்தி தொடர்பான பட்டப் பாடநெறிகள், பட்டப்பின் பாடநெறிகளை நடாத்துதல்

(இ) சமூக நலன்புரி முறைமை மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சிகள் தொடர்பான கல்வி நிகழ்ச்சிகள் நடாத்துதலும் அவற்றை முன்னேற்றுதலும்

(ஈ) சமூகப் பணிகளில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதும் சமூகப் பணி மற்றும் சமூக அபிவிருத்திக் கல்வியில் ஆக்கப்பூர்வமான நடைமுறையைத் தொடங்கி ஊக்குவித்தல்

(உ) சமூக நலன்புரி முறைமையின் ஊழியர்களின் தொழில்வாண்மை மற்றும் நிர்வாக நிபுணத்துவத்தை வளர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் மேற்கொள்ளல்.

(ஊ) சமூகப் பணி மற்றும் சமூக அபிவிருத்ததத் துறையில் நிபுணத்துவ சேவைகளை அரசு மற்றும் பிற அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளுக்கு கிடைக்கச் செய்தல்.

(எ) இதே போன்ற நோக்கங்களைக் கொண்ட பிற நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல்.

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

01. தொழில்வாண்மையிலான சமூகப்பணி கல்வியினை வழங்குதல்
02. சமூகப்பணி தொடர்பான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நெறிகளையும் நடாத்துதல்.
03. சமூகப்பணி, சமூக நலன்புரி மற்றும் சமூக அபிவிருத்தி ஆகிய துறைகளில் ஆய்வுகள் மற்றும் ஆக்கங்களை வெளியிடுதல்
04. சமூக நலன்புரி துறைகளில் உளவளத்துணை சேவைகளை நடாத்துதல்.
05. சமூக நலன்புரி துறையில் ஈடுபடுகின்ற அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களில் கடமைபுரியும் உத்தியோகத்தர்களின் முகாமைத்துவம் மற்றும் வினைத்திறனை முன்னேற்றுதல்.
06. சமூக நலன்புரி கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் உருவாக்குவதுடன் அவற்றைச் செயற்படுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகளை கௌரவ அமைச்சருக்கு வழங்குதல்.

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் செயற்பாடுகள் பின்வருமாறு**

01. சமூகப்பணி முதுமாணி, இளமாணி பட்டப் பாடநெறி, சமூகப்பணி டிப்ளோமா, துணைத் தொழில்வாண்மை பாடநெறி மற்றும் வேறு பயிற்சி பாடநெறிகளுக்கான பாடவிதானங்களை தயாரித்தல், ஒழுங்குபடுத்தல், நடாத்துதல், மற்றும் ஒருங்கிணைப்பு.
02. சமூக நலன்புரி மற்றும் சமூக கொள்கை பற்றிய ஆய்வுகளை நடாத்துதல், முன்னேற்றுதல், மற்றும் நடைமுறைபடுத்தல்
03. சமூகப்பணி தொடர்பான ஆக்கங்கள் மற்றும் சஞ்சிகைகள் வெளியிடல்.
04. சமூக நலன்புரி செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களின் உத்தியோகத்தர்களின் தொழில்வாண்மையான முகாமைத்துத்தை முன்னேற்றுவதற்கு வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிறுவனங்களின் நிதி உதவியுடன் பயிற்சிப் பட்டறைகளையும் கருத்தரங்குகளையும் நடாத்துதல்.
05. கௌரவ அமைச்சருக்கு சமூக நலன்புரி கொள்கை தயாரிப்பதற்கும், நடைமுறைப் படுத்துவதற்கும் உதவுவதற்காக அவரது கலந்துரையாடல்கள் மற்றும் உத்தியோகத்தர்களது கூட்டங்களில் கொள்கை ரீதியான தீர்மானம் எடுப்பதற்கு உதவுவதும் அதற்கான எழுத்துமூல ஆலோசனைகளை முன்வைத்தலும்.
06. அரச மற்றும் அரசசார்பற்ற துறைகளில் சமூக நலன்புரி திட்டங்களை நடைமுறைபடுத்தும் போது சமூகப்பணி மாணவர்களை அவர்களின் செயற்திட்டம் ஊடாக அந்நிறுவனங்களில் இணைக்கப்படுதல், அவர்களின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு தேவையான வழிகாட்டலை வழங்குதல், அவர்களின் சேவைகளை காத்திரமாக மேற்கொள்வதற்கு ஆலோசனை சேவை கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்துதல்.

### 1.2. ஆளும் சபை

1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனச் சட்டத்தின் 7 (1) ஆம் உப பிரிவின் படி 2020 ஆம் ஆண்டில் ஆளும் சபையில் அங்கம் வகித்தவர்களின் விபரம் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 01. | திருமதி. யமுனா பெரேரா | - | செயலாளர், - மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு (பதவி வழி தலைவி) 2023.01.01 திகதி முதல் 2024.09.23 வரை |
| 02. | திரு. ரஞ்சித் ஆரியரத்ன | - | செயலாளர் - புத்த சாசனம், மத மற்றும் கலாச்சார விவகாரங்கள், தேசிய ஒருங்கிணைப்பு, சமூக பாதுகாப்பு மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு (தலைவர் - பதவிவழி) |
| 03. | திருமதி. மலர்மதி கங்காதரன் | - | செயலாளர் - கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு (தலைவர் - பதவிவழி) 25.11.2024 முதல் தற்போது வரை |
| 04. | கலாநிதி ரவீந்திர வித்தானச்சி | - | 2023.05.24 முதல் இதுவரை |
| 05. | திரு. ஜீ.ஏ. திலக்கரத்ன | - | உறுப்பினர்- 2023.02.02 முதல் இதுவரை |
| 06. | பேராசிரியர். பிரேமகுமார த சில்வா | - | உறுப்பினர் - 2020.07.08 முதல் இதுவரை |
| 07. | பேராசிரியர். ஆர்.எம்.கே. ரத்னாயக்க | - | உறுப்பினர்- 2020.07.08 முதல் இதுவரை |
| 08. | cv பேராசிரியர். எச்.எம்.எஸ்.சீ.பீ. ஹீன்கெந்த | - | உறுப்பினர்- 2023.04.21 முதல் இதுவரை |
| 09. | சிரேஸ்ட பேராசிரியர். எச்.டீ.வை. தேவிக்கா ஜயதிலக்க | - | உறுப்பினர்- 2023.04.21 முதல் இதுவரை |
| 10. | பேராசிரியர். ஈ.ஏ.டீ. எதிரிசிங்ஹ | - | உறுப்பினர்- 2023.04.21 முதல் இதுவரை |
| 11. | பேராசிரியர். எம்.ஏ.டீ.எஸ்.ஜே.எஸ். நிரிஎல்ல | - | உறுப்பினர்- 2024.04.16 முதல் இதுவரை |
| 12. | பேராசிரியர். எஸ்.பீ. பிரேமரத்ன | - | உறுப்பினர்- 2024.04.16 முதல் இதுவரை |
| 13. | உதவி பொலிஸ் அத்யட்சகர் ஜாலிய நிசாந்த | - | உறுப்பினர்- 2024.04.16 முதல் இதுவரை |
| 14. | திரு. துமிந்த நெத்தசிங்ஹ நானாயக்கார | - | உறுப்பினர்- 2024.04.29 முதல் இதுவரை |
| 15. | திரு. கோட்டாபய ஜயரத்ன | - | உறுப்பினர்- 2020.02.28 முதல் 2024.04.16 வரை |
| 16. | திருமதி. சந்திமா விக்ரமசிங்ஹ | - | உறுப்பினர்- 2020. 02.28 முதல்2024.04.16 வரை |
| 17. | திரு. டீ. விதானகமாச்சி | - | உறுப்பினர்- 2020.02.28 முதல்2024.04.20 வரை |
| 18. | திருமதி. டப்.ஆர்.பீ.யு. நுவந்தி | - | உறுப்பினர்- 2023.02.27 முதல் இதுவரை |
| 19. | பேராசிரியர். இரேசா தர்சனி | - | உறுப்பினர்- - 2020.02.28 முதல்2024.04.20 வரை |

## 1.3. கல்விசார் பீட சபை

1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனச் சட்டத்தின் 10 (1) ஆம் உப பிரிவின்படி கற்றல் நடவடிக்கைகளுக்கான கல்விசார் பீட சபை வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 01. | திருமதி. யமுனா பெரேரா | - | செயலாளர், - மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு (பதவி வழி தலைவி) 2023.01.01 திகதி முதல் 2024.09.23 வரை |
| 02. | திரு. ரஞ்சித் ஆரியரத்ன | - | செயலாளர் - புத்த சாசனம், மத மற்றும் கலாச்சார விவகாரங்கள், தேசிய ஒருங்கிணைப்பு, சமூக பாதுகாப்பு மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு (தலைவர் - பதவிவழி) |
| 03. | திருமதி. மலர்மதி கங்காதரன் | - | செயலாளர் - கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு (தலைவர் - பதவிவழி) 25.11.2024 முதல் தற்போது வரை |
| 04. | கலாநிதி ரவீந்திர வித்தானச்சி | | 2023.05.24 இதுவரை |
| 05. | திருமதி. எம்.ரீ.ஆர்.எஸ் அத்தனாயக்க | - | மேலதிக பணிப்பாளர் நாயகம் 2017.01.16 முதல் 2024.02.02 வரை |
| 06. | பேராசிரியர். டப்.ஏ. தனபால | - | சிரேஸ்ட விரிவுரையாளர், சமூகவியல் பிரிவு, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| 07. | பேராசிரியர். சுனில் ஜயந்த நவரத்ன | - | பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம் |
| 08. | பேராசிரியர். உபாலி பன்னிலகே | - | பீடாதிபதி, மானிடவியற் பிரிவு, ருஹுணு பல்கலைக்கழகம் |
| 09. | பேராசிரியர். சுபாங்கனி.எம்கே. ஹேரத் | - | சிரேஸ்ட பேராசிரியர், சமூக அறிவியல் பிரிவு, களனி பல்கலைக்கழகம் |
| 10. | கலாநிதி. ஏ.டப்.கே.டப். சுபசிங்ஹ | - | சிரேஸ்ட பேராசிரியர், களனி பல்லைக்கழகம் |
| 11. | கலாநிதி எஸ்.எம்.ஏ.கே. சமரகோன் | - | பீடாதிபதி வணிக – முகாமைத்துவ பீடம் கொழும்பு பல்கலைக்கழகம். |
| 12. | திருமதி. கௌரி வாசுதேவன் | | பணிப்பாளர் (பயிற்சிப் பிரிவு) |
| 13. | திரு. வரதராஜா ஜெயரூபன் | - | பணிப்பாளர் (சமூகப்பணிக் கல்லூரி (ப.க) தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் |
| 14. | திரு. எம்.எஸ்.எம். அஸ்மியாஸ் | - | பணிப்பாளர் (சமூக அபிவிருத்தி, கொள்கை, ஆய்வு மற்றும் வெளியீடு) |
| 15. | திரு. ஏ.பீ. தினிந்து தருச | - | பதிவாளர், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம |
| 16. | திரு. எஸ் எரங்க மென்டிஸ் | - | உதவிப் பதிவாளர், (ப.க) |

## 1.4 கணக்காய்வு முகாமைத்துவக் குழு

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு. பீ.ஏ. திலகரத்ன | - | உறுப்பினர் 2023.02.02 முதல் இதுவரை |
| 02. | திரு. டீ. விதானகம்மச்சி | - | உறுப்பினர் 2020.02.28 முதல் 2024.04.28 வரை |
| 03. | துமிந்த நெத்தசிங்ஹ நானாயக்கார | - | உறுப்பினர் -2024.04.29 முதல் இதுவரை |
| 04. | திருமதி. டீ.எம்.ஜீ.டீ. மல்காந்தி | - | பிரதான உள்ள கணக்காயவாளர்(மகளிர் மற்றும் சிறுவர் விவகார மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு) |
| 05. | திருமதி. எம்.டீ.ஜ. மலகல | - | கணக்காய்வு திணைக்களம் (தேசிய கணக்காய்வு அலுவலகம் முதலாம் மற்றும் இரண்டாம கணக்காய்வு கூட்டங்களுக்காக |
| 06. | திரு. கே. கருணாரத்ன | - | உதவி கணக்காய்வாளர் (தேசிய கணக்காய்வு அலுவலகம்) மூன்றாம் மற்றும் நான்காம் கூட்டங்களுக்காக |

**தேசிய சமூக அபிவிருத்த நிறுவன பங்கேற்பு**

| | | | |
|---|---|---|---|
| 01. | கலாநிதி ரவீந்திர வித்தானச்சி | - | பணிப்பாளர் நாயகம் (ப.க) 2023.05.24 முதல் 2025.01.27 வரை |
| 02. | திருமதி. எல்.கே. புஷ்பகாந்தி | - | பணிப்பாளர் (நிருவாகம் மற்றும் நிதி) |
| 03. | திருமதி. யு.டீ.டீ.டீ. உஸ்ஹெட்டி | - | உள்ளக கணக்காளய்வாளர் |
| 04. | திருமதி. ஈ.எச் லசிக்கா மதுவந்தி | - | கணக்காளர் |
| 05. | திருமதி. தினுசா காரியவசம் | - | கணக்கு உத்தியோகத்தர் |

## 1.5 பணியாளர்கள்

**(அ) கல்விசார் உத்தியோகத்தர்கள்**

2024ஆம் ஆண்டு தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கல்விசார் உத்தியோகத்தர்கள் பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 01. | திருமதி. எம்.ரீ.ஆர்.எஸ் அத்தனாயக்க | - | மேலதிக பணிப்பாளர் நாயகம் கல்வி 2017.01.16 முதல் 2024.02.02 வரை |
| 02. | திருமதி. கௌரி வாசுதேவன் | - | மேலதிக பணிப்பாளர் நாயகம் (கல்வி) (ப.க) 2024.09.25 முதல் இதுவரை |

**(1) சமூக பணிக் கல்லூரி உத்தியோகத்தர்கள் பின்வருமாறு**

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு. வரதராஜா ஜெயரூபன் | - | விரிவுரையாளர் II 2006.07.03 முதல் 2012.07.02 வரை<br>விரிவுரையாளர் I 2012.07.03 முதல் 2017.07.31 வரை<br>சிரேஷ்ட விரிவுரையாளர் 2017.08.01 முதல் இது வரை |
| 02. | திருமதி.ஈ.ஏ.எம்.எஸ்.ஜீ. விஜேசேக்கர | | விரிவுரையாளர் II 2006.07.03 முதல் 2012.07.06<br>விரிவுரையாளர் I 2012.07.07 முதல் 2017.07.31<br>சிரேஷ்ட விரிவுரையாளர் 2017.08.01 |
| 03. | கலாநிதி. யு.எல்.எம். அஷ்கர் | - | விரிவுரையாளர் II 2009.03.02 முதல் 2015.03.01 வரை<br>விரிவுரையாளர I 2015.03.02 முதல் இது வரை |
| 04. | திருமதி. வீ. பாலமதி | - | விரிவுரையாளர் II 2013.09.16 முதல் இது வரை |
| 05. | திருமதி. எச்.எம்.எஸ். ஹேரத் | - | விரிவுரையாளர் II 2014.05.02 முதல் இது வரை |
| 06. | திருமதி. எல்.சீ. இனோக்கா ஜயசேன | - | விரிவுரையாளர் II 2015.12.01 முதல் இது வரை |
| 07. | திருமதி. ஏ.எம். மானாமுதலி | - | விரிவுரையாளர் II 2018.08.01 முதல் இது வரை |
| 08. | திரு. டீ.எம்.சீ. ஜனக்க பண்டாரத | - | விரிவுரையாளர் II 2023.04.17 முதல் இது வரை |
| 09. | திரு. தவராசா தர்சன் | - | விரிவுரையாளர் II 2023.04.17 முதல் இது வரை |
| 10. | செல்வி. கே.பீ.ஆர்.எஸ். அசங்கிக்கா | - | விரிவுரையாளர் II 2023.04.17 முதல் இது வரை |
| 11. | திரு. ஏ.எச். சஞ்ஜீவ | - | விரிவுரையாளர் II 2023.04.17 முதல் இது வரை |
| 12. | செல்வி. ஐ.எம்.எம்.கே. இஹலகெதர | - | விரிவுரையாளர் II 2023.04.17 முதல் இது வரை |
| 13. | திருமதி. கே.சீ.கே. த தாப்ரூவ் | - | விரிவுரையாளர் II 2024.08.01 முதல் இது வரை |
| 14. | திரு. எம்.கே.எம். சந்தீப்ப | - | விரிவுரையாளர் II 2024.11.12 முதல் இது வரை |
| 15. | செல்வி. பாத்திமா சிக்ரா | - | ஆங்கில போதானசிரியர், 2024.07.01. முதல் இதுவரை |
| 16. | திரு. டீ.எம்.டப்.கே. சந்திரசிரி | - | நூலகர் - 2015.06.01 முதல் இதுவரை |

**பயிற்சிப் பிரிவின் உத்தியோகத்தர்கள் பின்வருமாறு**

| | | | |
|---|---|---|---|
| 01. | திருமதி. கௌரி வாசுதேவன் | - | பணிப்பாளர் (பயிற்சி) 215.05.05 முதல் இதுவரை |
| 02. | திருமதி. தீப்தி நிரோஷிகா | - | பயிற்சி உத்தியோகத்தர் II 2007.03.01 முதல் 2013.02.28 வரை<br>பயிற்சி உத்தியோகத்தர் I 2013.03.01 முதல் 2018.07.31 வரை<br>சிரேஷ்ட பயிற்சி உத்தியோகத்தர் 2018.08.01 முதல் இதுவரை |
| 03. | திருமதி. குமுதுனி வெதிசிங்ஹ | - | பயிற்சி உத்தியோகத்தர் II 2012.05.01 முதல் 2019.09.30 வரை<br>சிரேஷ்ட பயிற்சி உத்தியோகத்தர் 2019.10.01 முதல் இதுவரை |
| 04. | திரு. பீ.கே.எஸ் கருணாரத்ண | - | பயிற்சி உத்தியோகத்தர் II 2013.08.01 முதல் இதுவரை |
| 05. | திரு. பீ.சீ. ஹெட்டியாராச்சி | - | பயிற்சி உத்தியோகத்தர் II 2013.08.01 முதல் இதுவரை |
| 06. | திருமதி. ஏ.எம்.கே.எல் அதிகாரி | - | பயிற்சி உத்தியோகத்தர் II 2013.08.01 முதல் இதுவரை |
| 07. | திரு. ஏ.எச் உபைதுல்லாஹ் | - | பயிற்சி உத்தியோகத்தர் II 2013.08.01 முதல் இதுவரை |
| 08. | திரு. ஜே. இரோன் பிரசாத் | - | பயிற்சி உத்தியோகத்தர் II 2013.08.01 முதல் இதுவரை |
| 09. | திரு. ரீ. தர்சன் | - | பயிற்சி உத்தியோகத்தர் II 2013.09.02 முதல் 2023.04.16 வரை |
| 10. | திரு. வை.எம். நிம்சாத் | - | பயிற்சி உத்தியோகத்தர் II 2017.07.03 முதல் இதுவரை |

**(2) ஆய்வுப்பிரிவின் உத்தியோகத்தர்கள் பின்வருமாறு,**

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு. எம்.எஸ்.எம். அஸ்மியாஸ் | - | பணிப்பாளர், ஆய்வுப் பிரிவு 2017.05.01 முதல் இதுவரை |
| 02. | திரு. ஜே.கே.பீ.யூ கீர்த்தி | - | ஆய்வு உத்தியோகத்தர் 2013.08.01 முதல் 2018.07.31 வரை<br>சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் 2018.08.01 முதல் இதுவரை |
| 03. | திரு. ஹரிஹரதாமோதரன் | - | சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் 2018.08.01 முதல் இதுவரை |
| 04. | திருமதி. நிலுகா விஜேபண்டார | - | ஆய்வு உத்தியோகத்தர் 2017.01.16 முதல் இதுவரை |
| 05. | திருமதி.எச்.கே.எஸ்.கே. சிரிகுமார | - | ஆய்வு உத்தியோகத்தர் 2014.05.02 முதல் இதுவரை |
| 06. | ஏ. எச். இந்திக்க சஞ்ஜீவ | - | உதவி ஆய்வாளர் 2014.05.02 முதல் 2024.04.16 வரை |
| 07. | திருமதி. கே.சீ.கே. த தாப்ரோவ் | - | உதவி ஆய்வாளர் 2014.05.02 முதல் 2024.07.31 வரை |
| 08. | செல்வி. ஏ. எரந்தி ஜயவர்ன | - | உதவி ஆய்வாளர் 2014.05.02 முதல் இதுவரை |
| 09. | திருமதி. எஸ்.எச்.என். மதுசான சில்வா | - | உதவி ஆய்வாளர் 2014.05.02 முதல் இதுவரை |

**(3) கல்விசாரா பணிக்குழுவினர்**

2024 ஆம் ஆண்டு தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் நிருவாகப் பிரிவில் உள்ளடக்கம் பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 01. | கலாநிதி. ரவீந்திர விதானச்சி | - | பணிப்பாளர் நாயகம் (ப.க) 2019.01.01 முதல் இது வரை |
| 02. | திருமதி. எல்.கே. புஷ்பகாந்தி | - | பணிப்பாளார் (நிதி மற்றும் நிர்வாகம்) 2017.03.01 முதல் இது வரை |
| 03. | திருமதி. யு.டீ.டீ.டீ. உஸ்ஹெட்டி | - | உள்ளக கணக்காளய்வாளர் 2011.10.17 முதல் இது வரை |
| 04. | திருமதி. ஈ.எச் லசிக்கா மதுவந்தி | - | கணக்காளர் 2021.12.15 முதல் இதுவரை |
| 05. | திரு. தினிந்து தாருச | - | பதிவாளர் 2024.07.165முதல் இது வரை |

**நிருவாகப் பிரிவில் ஊழியர்களின் எண்ணிக்கை பின்வருமாறு அமையும**

| இல | புதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் | நிரந்தரம் | இணைப்பு அடிப்படையில் | தற்காலிகம் |
|---|---|---|---|---|---|
| 01. | கணக்கு உத்தியோகத்தர் | 01 | 01 | - | - |
| 02. | நிறுவாக உத்தியோகத்தர் | 01 | 01 | | |
| 03. | உதவிப் பதிவாளர் | 01 | - | - | - |
| 04. | கணினி நிகழ்ச்சித்திட்ட இயக்குனர் | 01 | 01 | - | - |
| 05. | நிகழ்ச்சித்திட்ட இயக்குனர் | 01 | - | - | - |
| 06. | மொழிபெயர்ப்பாளர் | 02 | - | - | - |
| 07. | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (நிலைய பொறுப்பு) | 04 | 03 | - | - |
| 08. | முகாமைத்துவ உதவியாளர் | 35 | 30 | - | - |
| 09. | விடுதி பராமரிப்பாளர் | 01 | 01 | - | - |
| 10. | கட்புல செவிப்புல நுட்பவியலாளர் | 01 | - | - | - |
| 11. | சாரதி | 09 | 07 | - | - |
| 12. | கட்புல செவிப்புல உதவியாளர் | 01 | 01 | - | - |
| 13. | அலுவலக உதவியாளர் | 15 | 12 | - | - |

## 2. 2024 ஆம் ஆண்டில் ஜனவரி முதல் டிசம்பர் வரையான பிரிவுகளின் முன்னேற்றம்

### 2.1. நிருவாகம் மற்றும் நிதிப் பிரிவு

| ஒதுக்கப்பட்ட நிதி | நிதி ஒதுக்கீடு (மி.ரூ) | செலவு (மி.ரூ) | **பயன்படுத்தப்பட்ட நிதி, முடிவடைந்த நிதியின் அளவு % ஆக** |
|---|---|---|---|
| மீண்டுவரும் நிதி | 162.00 | 153.80 | 94.75% |
| மூலதனம் | 15.00 | 14.96 | 99.73% |
| சீதுவை கட்டிடத் தொகுதியின் கட்டுமானப்பணி | 100.00 | 98.91 | 98.91% |

சீதுவை கட்டிடத்தொகுதியின் கட்டுமானப் பணிகளுக்காக அமைச்சினால் செலவு மதிப்பீட்டின் கீழ் நிதி ஒதுக்கப்படுகிறது. Wing A மற்றும் B என பெயரிடப்பட்ட கட்டிடத் தொகுதியின் Wing A கட்டுமானப்பணிகள் நிறைவடைந்துள்ளதுடன் Wing B கட்டுமானப்பணிகள 98.19% நிறைவுசெய்யப்பட்டுள்ளது.

### Wing A கட்டிடத்தொகுதி

**முகப்பு**





### Wing B கட்டிடத்தொகுதி





# சமூகப்பணிக் கல்லூரி

சமூகப்பணிக் கல்லூரியானது தேசிய சமுக அபிவிருத்தி நிறுவனத்திலுள்ள மிகப் பெரியதும் பழையதுமான பிரிவாகும். 1952 இல் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புடன் சமூகப் பணி கல்வி இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டதுடன் தொழில்வாண்மையான சமூகப்பணிக் கல்வி ஆரம்பிக்கப்பட்டது. இது 1964 இல் சிலோன் சமூகப்பணி பாடசாலை என்றும், 1972 இல் இலங்கை சமூகப்பணி பாடசாலை என்றும் மறுபெயரிடப்பட்டதுடன் ஒரு அரசாங்க நிறுவனமாக செயல்பட்டது. சுமூகப்பணி பாடசாலையானது பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொழில்வாண்மையான சமூகப்பணி கல்வியை வழங்குகின்றது. ஆரம்பத்தில் குறுகிய கால பயிற்சி திட்டங்கள் மட்டுமே நிறுவனத்தால் நடத்தப்பட்டன. பாடசாலையானது பிரதான பாநெறிகளை நடாத்திவருகிறது. அதாவது 1978ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சமூகப் பணி டிப்ளோமா (SWD), 2013ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஈராண்டு சமூகப் உயர் டிப்ளோமா பாடநெறி (HDSW), 2005 ஆரம்பிக்கப்பட்ட சமூகப் பணி இளமாணி மற்றும் 2008ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சமூகப்பணி முதுமாணி மற்றும் பல குறுகிய கால மற்றும் பகுதி நேர பாடநெறிகள் உள்ளிட்ட பல முக்கிய கல்வித் திட்டங்களை நடாத்தி வருகின்றது. 1978ம் ஆண்டு 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 25ம் பிரிவின் கீழ் சமூகப்பணி பட்டத்தினை 2005 யூன் 01ம் திகதி 1395/15 இலக்க அதி விசேட வர்த்தமாணியில் பிரசுரிக்கப்பட்டதுடன் 2008ம் யூலை 07ம் திகதி ஆண்டு இல1557/7 விசேட வர்த்தமாணியில் பிரசுரிப்பு 1978ம் ஆண்டு 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 25ம் பிரிவின் கீழ் சமூகப்பணி முதுமாணிப்பட்டத்தினையும் ஆரம்பித்தது.




இப்பாடநெறிகளை நடாத்துவதன் நோக்கம் பின்வருமாறு

**நோக்கம்**

1. சமூகப்பணிக் கல்வி தொடர்பான புதிய நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்தல்
2. தற்போதுள்ள கல்வி நிகழ்ச்சிகளை தரமுயர்த்துதல்
3. சமூகப்பணி கல்வியில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில் மொழியினை பயன்படுத்துதல்
4. தொழில்வாண்மை அங்கீகாரத்தினை வடிவமைத்தலும் பெற்றுக்கொள்ளல்
5. சமூக அபிவிருத்திக்கும் வலுப்படுத்தலுக்கும் தொழில்வாண்மையான சமூகப்பணியாளர்களை உருவாக்குதல்

# சமூகப்பணி முதுமாணிப் பட்டம்




(வருடாந்த பட்டமளிப்பு விழா 2024)

இலங்கையில் முதன்முறையாக ஆரம்பிக்கப்பட்ட சமூகப் பணி முதுமாணி பட்டப் பாடநெறியின் முதலாம் குழு, கனடாவின் கிங்ஸ்டனில் உள்ள குயின்ஸ் பல்கலைக்கழகத்தினால் செயற்படுத்தும் கனேடிய சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் (CIDA) அனுசரணையின் கீழ் சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சுடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்டது.

சமூகப்பணி முதுமாணி பட்டத்தின் நோக்கமாக தொழில்வாண்மை தகைமை மற்றும் முகாமைத்துவ திறனுடன் கூடிய பயிற்றப்பட்ட மனிதவளத்தினை சமூக நலன்புரிக்காக உருவாக்குவதும் அதன் ஊடாக சமூக அபிவிருத்தியினை ஊக்கப்படுத்துவதும் ஆகும். இந்நிகழ்ச்சிகள் சமூகப்பணி தொடர்பான உயர் அறிவினையும், செய்முறைப் பயிற்சி என்பவற்றினையும் அடிப்படையாகக் கொண்டு பங்குபற்றுனர்களின் மனப்பாங்குகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் ஊடாக அவர்கள் சமூக அபிவிருத்தி துறையில் முன்னோடிகளாக கொள்கை வகுப்பின்போது அவர்களின் செயற்திறனான பங்களிப்பினை பெற்றுக்கொள்வதற்காகவும் தயாரிக்கப்பட்டுள்ளன.

### சமூகப்பணி முதுமாணி பட்டத்தின் (MSW) நோக்கங்கள்

சமூகப்பணி முதுமாணி பாடநெறியின் முக்கிய நோக்கம், ஏற்கனவே சமூகப் பணியில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகள் / பிற சமமான தகுதி வாய்ந்த நபர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக அரச மற்றும் தனியார் துறைகளனின் உள்ள கேள்வியினை பூர்த்திசெய்வதாகும். நிர்வாக மட்டத்தில் நாட்டில் உள்ள தொழில்முறை சமூகப் பணியாளர்களின் அவசரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவும் சமூகப் பணியில் மேலதிக அறிவைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஏனைய பாடத்துறைகளில் பட்டம்பெற்ற பட்டதாரிகள் மற்றும் ஏனைய தகைமைவாய்ந்தவர்களுக்கு வாய்ப்பினை வழங்குவதாகும்.

### சமூகப்பணியின் முதுமாணியின் பாட உள்ளடக்கம்

முதுமாணி பட்டத்தின் பாடத்திட்டத்தில் சமூக அறிவியல் தொடர்பான பாடங்கள் மற்றும் சமூக பணி பாடத்துடன் தொடர்பான பாடங்கள் உள்ளடங்குகின்றன. கோட்பாட்டு அறிவு மற்றும் நடைமுறை அறிவைப் பெற மாணவர்கள் இரண்டு களப் பயிற்சிகள் மற்றும் ஒரு ஆய்வுக் கட்டுரையை பூர்த்திசெய்ய வேண்டும். சமூகப் பணிக்கான சமூகவியல், சமூகப் பணிக்கான உளவியல், சமூகப் பணித் தத்துவம், இலங்கை சமூகத்தைப் புரிந்துகொள்வது, இலங்கையில் சமூக நலத்திட்டங்கள் உலகமயமாக்கல் மற்றும் சமூக நலன்புரி, சமூகப் பணியும் மனித உரிமையும், சமூகப் பணி முகாமைத்துவம், சமூகக் கொள்கை, சமூகப்பணி ஆய்வு முறைகள் போன்ற பாடங்களும் அவ்வாறே அடிப்படைக் களப் பயிற்சியும் சமுதாயப் பணி மற்றும்

ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் மாணவர்களுக்கு நடைமுறை அறிவு மற்றும் திறன்களைப் பெறுவதற்கான வாய்ப்பையும் வழங்குகிறது.

இச் செயற்திட்டங்கள் இலங்கைத் தகைமைக் கட்டமைப்பின்படி வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் சர்வதேச தரத்திலான மதிப்பெண்ணுடன் வழங்கப்படுகின்றன. எனவே, எங்கள் நிறுவனத்தில் சமூகப் பணியில் முதுமாணி பட்டப்படிப்பை முடித்த மாணவர்களுக்கு வெளிநாட்டில் வேலை வாய்ப்பு அதிக அளவில் உள்ளது.

## சமூகப்பணி பட்டப் பாடநெறி




(வருடாந்த பட்டமளிப்பு விழா 2024)

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் நடத்தப்படும் சமூகப் பணி இளமாணி பட்டப்படிப்பானது சமூகப் பணி பெறுமதிகள் தொடர்பில் சிறந்த தெளிவினை பெற்றுள்ள, சமூக நலச் சேவைகளை நிர்வகிக்கும் திறன் கொண்ட, நல்ல தரமான கற்பித்தல் மற்றும் ஆய்வில் ஈடுபடும் பல் இனம் கொண்ட இலங்கையில் சாந்தி சமாதானத்தை ஊக்குவிக்கக்கூடிய திறன் கொண்ட தொழில்முறை சமூகப் பணியாளர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சமூகப்பணி பட்டப் பாடநெறியானது 4 வருட முழுநேர பாநெறியாகும். அது 08 தவணைகளையும் வகுப்பறை கற்றலையும் களக் கற்றலையும் உள்ளடக்கியது.

சமூகப்பணி பட்டப்பாடநெறியானது 4 வருட முழுநேர பாடநெறியாக இருப்பதுடன் நான்கு வருட கற்றல் காலப் பகுதியில் முதலாம் வருடம் சமூகப்பணி டிப்ளோமா பாடநெறிக்கு சமமானதாகவும் இரண்டாம் வருடம் சமூகப்பணி உயர் டிப்ளோமாவுக்கு சமமானதாகவும் 3ம் மற்றும் 4ம் வருடம் சமூகப்பணி இளமாணி பட்டமாகவும் புதிய பாடவிதானத்தின் படி கட்டமைக்கப்பட்டுள்ளது. சமூகப் பணி இளமாணிப் பட்டப் பாடநெறியானது ஒரு தனித்துவமான பாடநெறியாகும். ஏனெனில் இது இலங்கையிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்கள் வழங்கும் ஏனைய சமூக அறிவியல் பட்டப் படிப்புகளைப் போன்று அல்லாமல் கோட்பாட்டு அறிவை மாத்திரமன்றி நடைமுறைப் பயிற்சியையும் வழங்குகிறது. களப் பயிற்சியின் மூலம் தனிநபர்கள், குடும்பங்கள், சமூகக் குழுக்கள், நிறுவனங்கள் மற்றும் சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுவதும், அந் நடவடிக்கைகள் குறித்த அறிக்கைகளைத் தயாரிப்பதும் கட்டாயமாகும். இது தவிர மாணவர்களினால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டடு அவர்களின் கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக் கொண்டு அறிக்கையும் அதிலிருந்து தயாரிக்க வேண்டும்.

**சமூகப்பணி இளமாணி பட்டதாரிகளுக்கு கிடைக்கும் தொழில் வாய்ப்புக்கள்**
**அரச துறை வேலைவாய்ப்புக்கள்**

சமூகப்பணி விரிவுரையாளர் - மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்

சமூகப்பணி போதானாசிரியர் - மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்

சுங்க அதிகாரி

அபிவிருத்தி உதவியாளர்

நன்னடத்தை உத்தியோகத்தர்

சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியேகத்தர்

தேசிய சிறுவர் பாதுகாப்ப உத்தியேகத்தர்

மகளிர் அபிவிருத்தி உத்தியேகத்தர்

உளவளத்துணையாளர்

இலங்கை ஆசிரியர் கல்விச் சேவை

உளமருத்துவ சமூகப்பணியாளர்

**அரச சார்பற்ற துறை**

– சமூகப்பணியாளர்களுக்கான கேள்வி தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் அதிகளவு காணப்படுகின்றுது

அதற்கினங்க, பின்வரும் தொழில்வாய்ப்புக்கள் எமது நிறுவனத்தில் கல்விகற்ற மாணவர்களுக்கு நிலவுகின்றது

- செயற்திட்ட முகாமையாளர்/ செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர்
- நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்
- உளவளத்துணையாளர்/தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்கள்
- மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள்
- கள உத்தியோகத்தர்கள்

தனியார் துறை:

- சமூகப்பபொறுப்பு ஒருங்கிணைப்பாளர்
- உளவளத்துணையாளர்
- மனித வள முகாமையாளர்/ உத்தியேகத்தர்

மேலும், NORAD, AUS-AID, Common Wealth மற்றும் இந்திய அரசின் புலமைப்பரிசில் போன்ற நிறுவனங்களில் இருந்து வெளிநாட்டு புலமைப்பரிசில்களை பெற்ற மாணவர்கள் உயர் கல்வியைத் தொடர வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். இந்த மாணவர்களுக்கு சர்வதேச அளவில் அதிக கேள்வி உள்ளது மற்றும் அவர்களுக்கு உயர் மட்ட வேலை வாய்ப்புகள் உள்ளன.
பாடப்புறச் செயற்பாடுகள்




**2024 மார்ச் 19ம் திகதி சமூகப்பணி தினம்** **"Share Future for Transformative Change"**















உலக சமூகப்பணிகள் தினம் ஆண்டுதோறும் மார்ச் மாதத்தின் மூன்றாவது செவ்வாய்க்கிழமைக் கொண்டாடப்படுகிறது. இந்த நாள் தொழில்வாண்மையான சமூகப்பணியாளர்களின் பங்களிப்பை அறிந்து பாராட்டுவதற்கும், சமூகங்களின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் சமூகப்பணிகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்கும், சமூக நீதி மற்றும் மனித உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் உலகளாவிய மேடையாகவும் விளங்குகிறது. உலகம் முழுவதும் சமூகப்பணியாளர்களின் அர்ப்பணிப்பு, தொழில்முறைத் தன்மை மற்றும் தாக்கம் இந்நாளில் கலந்துரையாடப்படுகிறது.

இந்த நிகழ்வில், சமூகப்பணி அமைப்புகள் துறையின் தரமான நடைமுறைகளை மேம்படுத்த, தீவிரமான சமூகப் பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த, மேலும் ஆபத்துக்கு உள்ளாகக்கூடிய மக்களுக்கான கொள்கைகளுக்கு ஆதரவாகச் செயல்படுகின்றன. தனிநபர் மற்றும் குழுக்களின் தேவைகளை மதிப்பீடு செய்வதன் மூலம், அத்தியாவசிய வளங்களை அடைந்துகொள்வதற்கான வாயப்பை எளிதாக்குவதன் மூலம், உள்ளார்ந்த ஆற்றல் மற்றும் வெளிப்புற ஆதரவு அமைப்புகளின் மூலம் சவால்களை சமாளிக்க அவர்களை வலுப்படுத்துவதன் மூலம் சமூகப்பணியாளர்கள் சமூகங்களில் முக்கிய பங்காற்றுகின்றனர். 2024 மார்ச் 19 அன்று, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் (NISD) சமூகப்பணி பாடசாலை அதன் வளாகத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுடன் உலக சமூகப்பணிகள் தினத்தை கொண்டாடியது. இந்த ஆண்டின் கருப்பொருளான "Future for Transformative Change" (மாற்றத்தை உருவாக்கும் எதிர்காலம்), நேர்மறை சமூக மாற்றத்தை வளர்க்கும் போது கூட்டுத் தொழில்பாட்டின் உலகளாவிய முக்கியத்துவத்தை வலியுறுத்தியது.

ந்தக் கொண்டாட்டத்தில் துறையின் மதிப்புமிக்க நிறுவனங்கள் பங்கேற்ற திறந்தநாள் நிகழ்ச்சி இடம்பெற்றது. சமூக சேவைகள் திணைக்களம், முதியோருக்கான தேசிய செயலாளர் அலுவலகம், பெண்கள், சிறுவர்கள் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் உளவளத்துணை பிரிவு, மாற்றுத்திறனாளிகள் தேசிய செயலாளர் அலுவலகம், சமூக பாதுகாப்பு சபை, தேசிய மனநல நிறுவகம், SERVE, குடும்பத் திட்டமிடல் சங்கம், MAS Holdings, SAPSRI, Ceylon Medexplorer Pvt. Ltd., மற்றும் இலங்கை தொழில்முறை சமூகப்பணியாளர்கள் சங்கம் ஆகியவை இந்நிகழ்வில் பங்கேற்ற சிறப்புப் பிரதிநிதிகளாக இருந்தனர்.

இந்த நிகழ்வின் போது, இந்நிறுவனங்களின் பிரதிநிதிகள் NISD மாணவர் சமூகத்துடன் மதிப்புமிக்க புரிதல்கள் மற்றும் தொழில்முறை அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதோடு, சமூகப்பணியின் நடைமுறை மற்றும் அதன் மாற்றுவிப்புத்திறன் பற்றிய அவர்களின் அறிவை வளப்படுத்தினர்.

மானிட வாழிடங்களில் சேவை வழங்கள் **2024**












BSW 2020/2021 குழுவின் மூன்றாம் ஆண்டு மாணவர்களால் நடத்தப்பட்ட கிராமப்புற முகாம் ஜூலை 22 முதல் ஆகஸ்ட் 1 வரை ரத்னபுரா மாவட்டத்தின் கொலோன்ன பிராந்தியச் செயலாளர் அலுவலகத்தில் வெற்றிகரமாக நடைபெற்றது. இந்த துறையடிப்படையிலான திட்டம் கொலோன்ன பிராந்தியச் செயலாளர் அலுவலகத்தின் ஆளுகைப் பகுதியின் கீழ் உள்ள 29 கிராமசேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கி, மாணவர்களுக்கு உண்மையான உலகளாவிய கற்றல் அனுபவத்தை வழங்கியது.

முகாமின் ஒரு பகுதியாக, மாணவர்கள் 10 நாட்கள் தொடர்ந்து தங்கியிருந்து துறைத்திட்டங்களில் ஈடுபட்டனர். அந்தக் காலப்பகுதியில் அவர்கள் விரிவான சமூக மதிப்பீடுகளை மேற்கொண்டு, குடியிருப்பாளர்கள் மற்றும் பிரதேச பங்குதாரர்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டனர். இந்த செயல்பாடுகள் மூலம், சமூகங்களை பாதிக்கும் பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் சேவை சார்ந்த பிரச்சினைகளை அடையாளம் காண அவர்களால் முடிந்தது. குறிப்பாக, அரசு சேவை வழங்கலில் உள்ள குறைபாடுகள், கிடைக்கக்கூடிய அரச சேவைகள் குறித்த பொதுமக்களின் குறைந்த விழிப்புணர்வு, சமூகங்களுக்கும் நிர்வாக அதிகாரிகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு மற்றும் தொடர்பில் காணப்படும் குறைபாடுகள் மீது சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது.

இந்த நடைமுறை அனுபவம், மாணவர்களின் சமூகப்பணித் திறன்களை மேம்படுத்தியதோடு, அந்தப் பிராந்தியத்திற்கு எதிர்கால தலையீடுகள் மற்றும் கொள்கை பரிந்துரைகளை உருவாக்கக்கூடிய மதிப்புமிக்க புரிதலையும் ஏற்படுத்தியது.

**சமூகப்பணிக் கல்லூரியினால் திரைசேரி நிதியத்தின் ஊடாக நடாத்தப்பட்ட கற்கைநெறிகள்**

| தொ.இ | பாடநெறி பெயர், மொழி மூலம் மற்றும் நிலையம் | பங்குபற்றிய மாணவர் எண்ணிக்கை | பாடநெறியின் முன்னேற்றம் | பாடநெறியின் நிதி முன்னேற்றம் (2024 ஜனவரி முதல் டிசம்பர் வரை) | |
|---|---|---|---|---|---|
| | | | | வருமானம் | செலவு |
| 01 | சமூகப்பணி இளமானி பட்டப் பாடநெறி (ஆங்கிலம்) 2018/2019 (சீதுவை) | 42 | பட்டமளிப்பு நடைபெற்றுள்ளது | | |
| 02 | சமூகப்பணி இளமானி பட்டப் பாடநெறி (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) 2019/2020 (சீதுவை) | 86 | பட்டமளிப்பு நடைபெற்றுள்ளது | | |
| 03 | சமூகப்பணி இளமானி பட்டப் பாடநெறி (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) 2020/2021 | 157 | நான்காம் ஆண்டு முதலாம் தவனை பரீட்சை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | 5.8 | 5.8 |
| 04 | சமூகப்பணி இளமானி பட்டப் பாடநெறி (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) 2021/2022 | 403 | மூன்றாம் ஆண்டு முதலாம் தவனை வகுப்பறை விரிவுரை நடாத்தப்படுகிறது | | |
| 05 | சமூகப்பணி இளமானி பட்டப் பாடநெறி (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) 2022/2023 | 183 | இரண்டாம் ஆண்டு முதலாம் தவனை வகுப்பறை விரிவுரை நடாத்தப்படுகிறது | | |
| 06 | சமூகப்பணி இளமானி பட்டப் பாடநெறி (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) 2023/2024 | 165 | முதலாம் ஆண்டு முதலாம் தவனை வகுப்பறை விரிவுரை நடாத்தப்படுகிறது | | |
| 07 | சிறுவர் நலன்புரிச் செயற்பாடு | 360 | நிறுவன மாணவர் நன்கொடை வழங்கப்பட்டுள் ளது | 7.0 | 7.0 |
| 08 | பட்டமளிப்புவிழா நடாத்தல் (2023) | 128 | 2024 டிசம்பர் மாதம் நடாத்தப்பட்டது | 0.20 | 0.20 |

**சமூகப்பணிக் கல்லூரியினால் நிதி அரவிட்டு நடாத்தப்பட்ட பட்டப் பாடநெறிகள்**

| தொ.இ | பாடநெறி பெயர், மொழி மூலம் மற்றும் நிலையம் | பங்குபற்றிய மாணவர் எண்ணிக்கை | பாடநெறியின் முன்னேற்றம் | பாடநெறியின் நிதி முன்னேற்றம் (2024 ஜனவரி முதல் டிசம்பர் வரை) | |
|---|---|---|---|---|---|
| | | | | வருமானம் | செலவு |
| 01 | சமூகப்பணி முதுமாணி பட்டப் பாடநெறி (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) 2021/2022 (சீதுவை) | 67 | இரண்டாம் வருட இரண்டாம் தவனை ஆய்வறிக்கை | 17.05 | 12.96 |
| 02 | சமூகப்பணி முதுமாணி பட்டப் பாடநெறி (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) 2022/2023 (சீதுவை) | 150 | முதலாம் வருட இரண்டாம் தவனை வகுப்பறை விரிவுரை நடாத்தப்படுகிறது | | |
| 03 | சமூகப்பணி டிப்ளோமா பாடநெறி (சிங்களம்,) 2022/2023 (சீதுவை) | 30 | முதலாம் வருட இரண்டாம் தவனை களச்செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர் | | |

# பயிற்சிப் பிரிவு




(வருடாந்த டிப்ளோமா வழங்கும் வைபவம் - 2024)

**அறிமுகம்**

2004ம் ஆண்டு தாபிக்கப்பட்ட பயிற்சிப் பிரிவானது தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் நிருவாக கட்டமைப்பிலுள்ள நான்கு பிரதான பிரிவுகளில் ஒன்றாக கருதமுடியம். இப்பிரிவானது பயிற்சியளிக்கும் பணிப்பாளரின் கீழ் இயங்கிவருகின்றது. சிரேஸ்ட பயிற்சி உத்தியோகத்தர்கள் இருவரையும் இரண்டாம் தரநிலையைச் சார்ந்த பயிற்சி உத்தியோகத்தர்கள் 06 பேரும் இப்பிரிவில் பணிபுரிகின்றனர். இது தவிர தரம் I சார்ந்த முகாமைத்துவ உதவியாளர் இருவரும் அலுவலக உதவியாளர் ஒருவரும் இப்பிரிவில் பணியாற்றுகின்றனர்.

2024ம் ஆண்டு செயற்பாட்டுத் திட்டத்திற்கு ஏற்ப பயிற்சிப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களாக, சமூக நலன்புரி முறை மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சிகள் தொடர்பான கல்விசார் நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்துபார்த்தல் மற்றும் அவற்றை முன்னேற்றுதல், சமூகப்பணியில் தொழில்நுட்பத்தினை பயன்படுத்துதல் உள்ளிட்ட சமூகப்பணி மற்றும் சமூக அபிவிருத்தி கல்வி முறையில் ஆக்கபூர்வமான பரீட்சயத்தை ஆரம்பித்தல் மற்றும் முன்னேற்றுதல், அதற்கு சமனான நோக்கத்தினைக் கொண்ட வேறு நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் பணிபுரிதல் மற்றும் சமூக நல்புரியில் ஈடுபடுகின்ற மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிநெறிகளையும் பயிற்றுவிப்புக்களையும் நடாத்திச்செல்லுதல்.

இப்பிரிவின் மூலம் அபிவிருத்தி தொடர்பான துறைகளுடன் தொடர்புபடுகின்ற பயிற்சி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் பயிற்சி நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. சுமூக நலன்புரி, சமூக அபிவிருத்தி தொடர்பான வேண்டுகோளை மையமாகக் கொண்டு தொடர்ச்சியான தொழில்வாண்மை நிகழச்சிகளை நடாத்துதல், பயிற்சி தேவைகளை அடையாளம் காண்தல் மற்றும் சமுகத் தலைவர்கள், கள உத்தியோகத்தர்கள் போன்றோருக்கான சமுதாய அபிவிருத்தியினை அடிப்படையாகக் கொண்டு பாடநெறிகளை அறிமுகப்படுத்தலும் நடாத்துதலும் இப்பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது. அவ்வாறே பயிற்சிப் பிரிவின் பயிற்சித் திட்டங்கள் பிராந்திய பயிற்சி நிலையங்கள் மற்றும் தொடர்புடைய பகுதிகளை மையமாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பயிற்சிப் பிரிவானது தனது கல்வி நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் வகையில் உளவளத்துணை இளங்கலை (கௌரவ) பட்டப்படிப்பை தொடங்கும் நோக்கத்துடன் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இப்பிரிவின் மூலம் நீண்டகால மற்றும் குறுங்கால பயிற்சி நிகழச்சிகள் மற்றும் பாடநெறிகள் மட்டுமன்றி ஏனைய தொழில்வாண்யையான பாடநெறிகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. அவ்வாறு ஒழுங்கு செய்யப்படுகின்ற பாடநெறிகள் பின்வருமாறு: உளவளத்துணை உயர் டிப்ளோமா, உளவளத்துணை டிப்ளோமா, முதுமையியல் மற்றும் முதியோர் பராமரிப்பு டிப்ளோமா, சிறுவர் பராமரிப்பு டிப்ளோமா, சமூக பாதுகாப்பு டிப்ளோமா, சமுதாயஞ்சார் சீர்த்திருத்த டிப்ளோமா, உளவளத்துணை சான்றிதழ் கற்கைநெறி, சிறுவர் மையப்படுத்திய சமுதாய அபிவிருத்தி சான்றிதழ் கற்கை, விசேட கல்வி கற்பித்தல் தொடர்பான சான்றிதழ் கற்கை மற்றும் சமூகப்பணி சான்றிதழ் கற்கை நெறி.

இவை சிங்கள, ஆங்கில மற்றும் தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்துவதற்கான ஆற்றல் உள்ளதுடன் உறிய கற்கைநெறிக்குள்ள கேள்வியினை அடிப்படையாகக்கொண்டு மொழிமூலம் தீர்மானிக்கப்படும். பயிற்சிப் பிரிவுக்கு கிடைக்கப்பெறும் வேண்டுகோலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் குறுங்கால பயிற்சிகளை ஒழுங்கு செய்செய்யப்படும்.

உளவளத்துணை இடையீட்டு நுட்பமுறைகள், சீர்த்திருத்த சேவைகளுடன் இணைந்த உளவளத்துணை, போதைப்பொருளுக்கான உளவளத்துணை, மெண் திறன்கள், விடய முகாமைத்துவத்திற்கான அடிப்படை திறன்கள், குடும்பங்களுடன் பணிபுரிவதற்கான அடிப்படைத் தகைமைகள், குழுக்களுடன் பணிபுரிவதற்கான அடிப்படைத் திறன்கள், சமுதாயத்துடன் பணிபுரிவதற்கான அடிப்படைத் திறன்கள், தலைமைத்துவம், மோதல் முகாமைத்துவம், மகிழ்வான குடும்பம், உளவளத்துணை மதிப்பீடு, நெருக்கீடு மற்றும் உளவியல் உளவளத்துணை, எதிர்பாரா கர்ப்பம் மற்றும் உளவளத்துணை, சமூக பீதியை முகாமை செய்தல், சமுதாய பாதுகாப்பு, பணிச் சூழலையும் அன்றாட வாழ்க்கையை சமநிலைப்படுத்துவதற்கான வாழ்க்கைத் திறன், சிறுவர் அபிவிருத்தி, விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கான சமூகப்பணி இடையீடு, செயற்திட்ட வரைவுக்கான பயிற்சிகள், சமதாய செயற்திட்ட முகாமைத்துவத்திற்கான பயிற்சிகள், முதியோர் பராமரிப்பிற்கான உளவளத்துணை இடையீடு, வறுமை ஒழிப்பிற்கான வழிமுறைகளும் நிலையான வாழ்க்கை அபிவிருத்தியும், மோதல் தீர்த்தலுக்கான சமுதாய அபிவிருத்தி மற்றும் சமுதாயத்தை அடிப்டையாகக் கொண்ட முகாமைத்துவமும் ஆற்றல் விருத்திக்கான பயிற்சிகளும் இவற்றுள் உள்ளடங்கும்

## 2024ம் ஆண்டில் பயிற்சிப் பிரிவினால் நடாத்தப்பட்ட பாடநெறிகள்

### *பட்டப் பாடநெறிகள்*

### 1. உளவளத்துணை இளமாணி (விசேட) பட்டத்தை ஆரம்பித்தல்

#### அறிமுகம்

இலங்கையில் சமூக கலாசாசார பின்னணியில் பல்வேறு பிரச்சினைகளை மக்கள் எதிர்நோக்குவதோடு அவற்றை தீர்க்கும் வகையில் தொழில்வாண்மையான இடையீட்டின் தேவை எழுந்துள்ளது. அத்தகைய கல்வியியல் ரீதியான தேவையை நிறைவேற்றும் நோக்கில் இந்த பட்டப் பாடநெறியினை ஆரம்பிப்பதற்கு தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் இவ்வாண்டில் நடவடிக்கை எடுத்துள்ளது. உளவளத்துணைக் கல்வியின் பொறுப்பு மற்றும் கடமைகள், பெறுமதிகளை அடையாளம் காணல், உளவளத்துணையில் ஆய்வு மற்றும் கண்காணித்தலை மேற்கொள்ளல், அச்சுறுத்தலில் உள்ள குழுக்கள் மற்றும் ஓரங்கட்டப்பட்ட மக்களுக்கான தொழில்வாண்மையான உளவளத்துணை சேவையை வழங்குதல் என்பன இப்பட்டப்பாடநெறியின் நோக்கங்களாகும்.

முன்மொழியப்பட்ட உளவளத்துணை இளமாணி (விசேட) பாடநெறியின் புதிய பாட உள்ளடக்க முன்மொழிவுப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் தரத்தை உறுதிப்படுத்தும் நிபுணத்துவ குழுவின் (SCAQA) உறுப்பினர்களின் சிபாரிசுக்கமைய அது மேலும் ஒழுங்கமைக்கப்படவேண்டிய விதம் தொடர்பாக

கருத்து தெரிவித்துள்ளனர். அதற்கேற்ப அத்திருத்தங்கள் தொடர்பான நிறுவன நிருவாகம் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மனிதவியல் மற்றும் முதுமையியல் பட்டப்படிப்புகள் ஆரம்பித்தல்**

மனிதவியல் மற்றும் முதுமையியல் தொடர்பான முன்மொழியப்பட்ட பட்டப்படிப்புகளின் பாடத்திட்ட திருத்தங்கள் அங்கீகாரம் மற்றும் தர உறுதிப்பாட்டுக்கான சிறப்பு குழு உறுப்பினர்கள் (SCAQA) மூலம் பரிசோதிக்கப்பட்டன. அதன்படி, தேவையான தொடர் நடவடிக்கைகள் நிறுவனம் வழங்கும் நிர்வாக அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்களின் கீழ் மேற்கொள்ளப்படும்.





## உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி

**அறிமுகம்**

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பயிற்சிப் பிரிவினால் வார இறுதி பயிற்சி நெறியாக உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி முன்னெடுக்கப்பட்டுவருகிறது. இந்த டிப்ளோமா பாடநெறியானது பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் இலங்கை கல்வித்தரச் சட்டகம் (SLQF) சிபாரிசுகளுக்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ளது. அறிவு, திறன், மனப்பாங்கு மற்றும் உளப் பக்குவத்துடன்கூடிய உரிய பிரயோக அனுபவத்தினை கொண்ட தொழில்வாண்மொயளர்களை உருவாக்குவது இதன் இலக்கு ஆகும் உளவளத்துணைத் துறைக்கு தரமான தொழில்வாண்மையாளர்களை உருவாக்குதல் உளவளத்துணையாளர்களின் உயர் தொழில்வாண்மை திறன்களை விருத்தி செய்தல் உளவளத்துணையாளரின் இடையீட்டு திறனை மேம்படுத்தல் என்பன நோக்கங்களாகும். சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் இப்பாடநெறியின் காலம் 12 மாதங்களாகும். இப்பாடநெறியில் 03 மாத கால களப்பரீட்சயமும் உள்ளடங்கும். (வார இறுதியில் நடாத்தப்பட்டுவரும் பாடநெறியாகும்.) இதற்கான முழு மதிப்பெண்கள் (Credit) 30 ஆகும். இதில் விரிவுரைகள் 405 மணித்தியாலங்களும் 150 மணித்தியாள களப்பயிற்சியினையும் உள்ளடக்கியுள்ளது. அதற்கேற்ப முழுமையாக 555 மணித்தியாளங்களை உள்ளடக்கியதாக 09 பாடநெறி அலகுகளையும் களப்பயிற்சியினையும் களச் சுற்றுலாவினையும் உள்ளடக்கியதாக இப்பாடநெறி அமைகிறது.

**ஆங்கில டிப்ளோமா பாடநெறி**

**அறிமுகம்**

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பயிற்சி பிரிவு, ஆங்கில டிப்ளோமா பாடநெறியை இணையவழி ஊடாக வாரநாள் பாடநெறியாக நடத்துகிறது. இந்தப் பாடநெறி பல்கலைக்கழக மானியக் குழுவின் வழிகாட்டுதல்கள் மற்றும் இலங்கை கல்வித்தரச் சட்டகத்திற்கேற்ப (SLQF) வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடநெறியின் நோக்கம் ஆங்கிலத்தில் எழுதுதல், வாசித்தல் மற்றும் பேசுதல் ஆகிய துறைகளில் வலுவான திறன்கள் கொண்ட திறமையான நபர்களை உருவாக்குவதாகும். மேலும், சரியான இலக்கணப் பயன்பாடு, துல்லியமான உச்சரிப்பு மற்றும் சமூகத்தில் ஆங்கிலத்தின் பயனுள்ள நடைமுறைப் பயன்பாட்டை மேம்படுத்துவதே இதன் குறிக்கோளாகும். இப் பாடநெறியின் காலம் 4 மாதங்கள் ஆகும். தினசரி ஒப்படைகள் உள்ளடங்குகிறது.. மொத்த மதிப்பெண் அலகுகள் 30 ஆகும். இந்த ஆங்கில டிப்ளோமா பாடநெறி ஆறு பாடங்களை உள்ளடக்கியது.

**2024 ஆம் ஆண்டில் உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி இடம்பெற்ற இடங்கள்**

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், சீதுவை பிரதான நிலையம் (சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம்), தலாவ/குருணாகல் பிரதேச வள நிலையம், அம்பாறை பிரதேச வள நிலையம் (சிங்கள மற்றும் தமிழ்), கண்டி (சிங்கள மற்றும் தமிழ் மொழிமூலம்), கிளிநொச்சி (தமிழ் மொழிமூலம்), மட்டக்களப்பு (தமிழ் மொழிமூலம்), யாழ்ப்பாணம் (தமிழ் மொழிமூலம்), திருகோணமலை (தமிழ் மொழிமூலம்).

**குறுங்கால பயிற்சிகள்**

**பயிற்சி பிரிவின் ஊடாக திறைசேரி ஒதுக்கீடுகள் மூலம் நடத்தப்பட்ட குறுகியகால பயிற்சி நிகழ்வுகளின் சாராம்சம் பின்வருமாறு**

| தொ.இ | நிகழ்ச்சி | நிலையம் | பங்கேற்றவர் | எண்ணிக்கை | செலவு |
|---|---|---|---|---|---|
| 01 | பரீட்சை செயற்பாடுகள் தொடர்பான பொறுப்பு மற்றம் கடமைகள் தொடர்பான விழிப்பூட்டல் பயிற்சி – கல்வி சார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் | சீதுவை | கல்வி சார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் | 78 | 32,740.00 |
| 02 | கொள்முதல் தொடர்பான பயிற்சி (Procumment) | சீதுவை | கல்வி சார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் | 65 | 19,680.00 |
| 03 | உளவளத்துணை பாடத்திட்ட புதுப்பிப்பில் பயிற்சி கல்வி சார் உத்தியோகத்தர்கள | சீதுவை | கல்வி சார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் | 30 | 19,850.00 |
| 04 | வினாத்தாள் தயார் செய்தல், மேற்பார்வை மற்றும் பரீட்சை நடத்தல் – கல்வி சார் மற்றும் கல்விசாரா | சீதுவை | கல்வி சார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் | 58 | 37,830.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 05 | முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கில பாடநெறிகளைப் பிரச்சாரம் செய்யும் நடவடிக்கைகள் – வடக்கு, வடமத்திய, வடமேற்கு, மேற்கு மற்றும் தென் மாகாணங்களை உள்ளடக்கியது | சீதுவை தலாவை கிளிநொச்சி ரண்ண அம்பாறை | குறைந்த வருமானம் கொண்ட மற்றும் அஸ்வெசும சேவைப் பயனாளி குடும்பங்களின் கா.பொ.த சா.த தேர்வு சித்தியடைந்த பிள்ளைகள், அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகள் பணியாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் | 2,000 | 147,126.00 |
| மொத்தம் | | | | **2231** | **257,226.00** |

**பயிற்சி பிரிவு ஊடாக இலவசமாக நடத்தப்பட்ட குறுகியகால பயிற்சி நிகழ்வுகளின் சுருக்கம்**

| **தொ.இ** | **நிகழ்ச்சி** | **நிலையம்** | **எண்ணிக்கை** | **செலவு** |
|---|---|---|---|---|
| .01 | பரீட்சை நடவடிக்கைகள் தொடர்பான சட்டதிட்டங்கள் தொடர்பிலான குறுங்கால பயிற்சி | சீதுவை | 70 | இலவசமாக நடாத்தப்பட்டது |
| 02 | முதியோர்களின் உளநல மேம்பாடு தொடர்பான குறுங்கால பயிற்சி | சுவிசுதர்மாராமய, லியனகேமுல்லை | 250 | இலவசமாக நடாத்தப்பட்டது |
| 03 | உண்ணிப்பாக செவிமடுத்தல் தொடர்பான குறுங்கால பயிற்சி | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 75 | இலவசமாக நடாத்தப்பட்டது |
| | மொத்தம் | | **395** | |

பயிற்சி பிரிவு திரைசேரி ஒதுக்கீடுகள் மூலம் நடத்தப்பட்ட குறுகியகால பயிற்சி நிகழ்வுகள் மற்றும் பயிற்சி பிரிவு இலவசமாக நடத்திய குறுகியகால பயிற்சி நிகழ்வுகளில், மொத்தமாக 2,626 நபர்கள் பங்கேற்றனர். (2231 + 395 = 2626)

**2024 ஆம் ஆண்டில், உளவளத்துணை உயர்தர டிப்ளோமா, உளவளத்துணை டிப்ளோமா பாடநெறிகள் மற்றும் பிற டிப்ளோமா பாடநெறிகளிலிருந்து பயிற்சி பிரிவு பெற்ற வருமானங்கள்**

| **தொ.இ** | **பாடநெறி** | **அரவிடப்பட்ட கட்டணம் ரூ** | **மாணவர் எண்ணிக்கை** | **நிறுவனத்திற்கு கிடைத்த நிதி (ரூ)** | |
|---|---|---|---|---|---|
| **01** | உளவளத்துணை உயர் டிப்ளோமா பாடநெறி (சிங்களம்) 2022/2023 | 76,000.00 | 23 பேர் பதிவு செய்யப்பட்டதுடன் 21 பேர் பாடநெறியை பூர்த்திசெய்துள்ளனர் | பாடநெறியின் நிதி 2023ம் ஆண்டாகும்போது கிடைக்கப்பெற்றுவிட்டது | |
| 02 | உளவளத்துணை டிப்ளோமா பாடநெறி (சிங்களம்/தமிழ்/ ஆங்கிலம்) 2022/2023 2023/2024 2024/2025 | 61,000.00 | 691 பேர் பதிவு செய்யப்பட்டதுடன் 622 பேர் பாடநெறியை தொடர்கின்றனர் | முதலாம் மற்றும் இரண்டாம் தவணை | 14,260,000.00 |
| 01 | ஆங்கில டிப்ளோமா பாடநெறி | 32000.00 | 40 பேர் பதிவு செய்யப்பட்டதுடன் 20 பேர் பாடநெறியை பூர்த்திசெய்துள்ளனர் | முழுப் பாடநெறிக் கட்டணம் | |
| **மொத்தம்** | | | | | **14,260,000.00** |

**2024ம் ஆண்டு பயிற்சிப் பிரிவின் ஊடாக வருமானம் ஈட்டப்பட்ட குறுங்கல பயிற்சிகள்**

| தொ.இ | பாடநெறி | அரவிடப்பட்ட கட்டனம் | மாணவர் எண்ணிக்கை | நிறுவனத்திற்கு கிடைக்கப்பெற்ற நிதி |
|---|---|---|---|---|
| 01 | சமுதாயஞ்சார் சீர்த்திருத்தத்திற்கான சமூகப்பணி பயன்பாடு தொடர்பான இருநாள் பயிற்சி | 62,500.00 | ரத்தினபுரி மாவட்ட சமுதாயஞ்சார் சீர்த்திருத்த உத்தியோகத்தர்கள் 62 | 62,500.00 |
| 02 | சமுதாயஞ்சார் சீர்த்திருத்த உத்தியோகத்தர்களுக்கான போதைப்பொருள் மற்றும் சிறு குற்றங்கள் தடுத்தல் இருநாள் குறுங்கால் பயிற்சி | 67,500.00 | 50 சமுதாயஞ்சார் சீர்த்திருத்த உத்தியோகத்தர்கள் | 67,500.00 |
| 03 | நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறுவர் பராமரிப்பு தொடர்பான ஒருநாள் குறுங்கால பயிற்சி | 300,000.00 | 40 சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் | 300,000.00 |
| 04 | துலைமைத்துவம் மற்றும் தொடர்பாடல் பற்றிய குறுங்கால பயிற்சி - - HALO TRUST | 234,375.00 | 40 சமுதாயக் குழுக்களுக்காக | 234,375.00 |
| 05 | செயற்திறன் காணல் தடைதாண்டல் பரீட்சைக்கான நான்கு நாள் குறுங்கால பயிற்சி | 150,000.00 | 100 சமூக சேவை உத்தியோகத்தர்கள் | 150,000.00 |

படம்: உளவளத்துணை பாடவிதானம் இற்றைப்படுத்தல் தொடர்பான பயிற்சி – கல்விசார் உத்தியோகத்தர்கள்




படம்: ஆங்கில டிப்ளோமா பாடநெறி ஆரம்ப நிகழ்வு









# பிரதேச பயிற்சி நிலையங்கள் தொடர்பான விபரம்

**சமூகப்பணி பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் களக் கற்கைக்கான நிலையம், ரண்ண**

**அறிமுகம்:**

தென் மாகாணத்தின் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தை மையமாகக் கொண்டு 2014.11.05ம் திகதி ஸ்ரீ ஆனந்த ஹிமி பகுதி, 100 அடி வீதி ரண்ண எனும் விலாசத்தில் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் சமூகப்பணி பயிற்சி ஆய்வு மற்றும் களக் கற்கைக்கான பிரதேச நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. நிலையத்தில் 02 கட்டிடங்கள் சொந்தமாக உள்ளதுடன் அதில் 50 மாணவர்களுக்கு வசியளிக்கக்கூடிய வகையில் விரிவுரை 02, தங்குமிட வசதிகளை வழங்கக்கூடிய 03 அறைகளும் அலுவலக அறையும் சிறிய விரிவுரை மண்டபமும் உள்ளடங்கும்.

### 01.நிலைய உத்தியோகத்தர்கள் பற்றிய விபரம்

| தொ.இ | அனுமதிக்கப்பட்ட பதவிப் பெயர் | இருப்பவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | நிலைய பொறுப்பதிகாரி/நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (பதில் நியமனம்) | 01 |
| 02 | முகாமைத்துவ உதவியாளர் | 02 |
| 03 | அலுவலக உதவியாளர் | 01 |

ரண்ண நிலையம் 2024 யூலை மாதம் இறுதியில் இருந்து மூடப்பட்டுள்ளதுட் அதுவரை நடாத்தப்ட்ட நிகழ்ச்சிகள் பின்வருமாறு:

ரண்ண நிலையத்தினால் 2024ம் ஆண்டு இலவசமாக நடாத்தப்பட்ட குறுங்கால பயிற்சிகளின் விரபம்

| தொ.இ | திகதி | பிரதேச செயலகப் பிரிவு | நிகழச்சி நடத்தப்பட்ட நிறுவனம் | பயனாளிகள் |
|---|---|---|---|---|
| 01 | 2024.03.15 | தங்காலை | தங்காலை பிரதேச பாடசாலைகளில் பணிபுரியும் உளவளத்துணை ஆசிரியர்களுக்காக | 26 |
| 02 | 2024.04.24 | வலஸ்முல்லை | வலஸ்முல்லை தொழில்வாண்மை பயிற்சி அதிகாரசபையில் கல்விகற்றும் மாணவர்களுக்காக | 37 |
| 03 | 2024.04.25 | எம்பிலிபிட்டிய | எம்லிபிட்டடிய தேசிய இளைஞர் சேவை மன்ற உத்தியோகத்தர்களும் மாணவர்களும் | 37 |
| 04 | 2024.04.25 | எம்பிலிபிட்டிய | எம்லிபிட்டடிய தொழிற்பயிற்சி அதிகாரசபையில் கல்விகற்கும் மாணவர்களுக்காக | 34 |
| 05 | 2024.04.26 | தங்காலை | தங்காலை பி.செயலக கிராம சேவைகர்களுக்காக | 22 |
| 06 | 2024.04.26 | தங்காலை | ஹ/ சித்தார்த்த மகா வித்தியாலய மாணவர்களுக்காக | 96 |
| 07 | 2024.04.26 | அங்குனுகொலபெலஸ்ஸ | ஹ/ மகாநாம தேசிய பாடசாலை மாணவர்களுக்காக | 59 |

| | | | | |
|---|---|---|---|---|
| 08 | 2024.05.07 | தங்காலை | தங்காலை தொழிற்பயிற்சி அதிகாரசபை உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்களும் | 51 |
| 09 | 2024.05.07 | தங்காலை | தங்காலை NAITA நிறுவனத்தில் கல்விகற்கும் மாணவர்களுக்காக | 22 |
| 10 | 2024.05.08 | பெலிஅத்த | பெலிஅத்த தொழில்நுட்ப பாடசாலையில் கல்விகற்கும் உத்தியோகத்தர்களுக்காக | 41 |
| 11 | 2024.05.08 | பெலிஅத்த | பெலிஅத்த தொழில்நுட்ப பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்களுக்காக | 220 |
| 12 | 2024.05.09 | பெலிஅத்த | பெலிஅத்த பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்காக | 47 |
| 13 | 2024.05.09 | பெலிஅத்த | பெலிஅத்த பிரதேசபையின் உத்தியோகத்தர்களுக்காக | 47 |

**சமூகப்பணி பயிற்சி, ஆய்வு மற்றும் களக்கற்கைக்கான பிரதேச வள நிலையம், அம்பாறை**






**அறிமுகம்:**

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தினை மையமாகக்க கொண்டு 07.2013ம் திகதி டீ/25, புதிய நகரம், அம்பாறை எனும் விலாசத்தில் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் சமூகப்பணி, ஆய்வு மற்றம் களக் கற்கைக்கான பிரதேச வள நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. செயற்பாடுகளை அரசாங்க உத்தியோகபூர்வ இல்லத்தில் நடாத்தப்பட்டு வருகின்றது. அரசாங்க உத்தியோகபூர்வ இல்லமொன்றை புதுப்பித்து நிலையத்தின் கட்டிடமாக பயன்படுத்தத்தப்பட்டு வருகின்றது. அங்கு அலுவலக அறைகள் 02 உம், மாணரவர்கள் 30 பேர் அமரக்கூடியவாறு அமைக்கப்பெற்ற மண்டபமும், இருவர் தங்கக்கூடிய அறை ஒன்றும் உள்ளடங்குகிறது.

**01.நிலைய உத்தியோகத்தர்கள் பற்றிய விபரம்**

| தொ.இ | அனுமதிக்கப்பட்ட பதவிப் பெயர் | இருப்பவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | நிலைய பொறுப்பதிகாரி/நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | 01 |
| 02 | முகாமைத்துவ உதவியளார் | 02 |
| 03 | அலுவலக உதவியாளர் | 01 |

**நிலையத்தினால் 2024ம் ஆண்டு இலவசமாக நடத்தப்பட்ட குறுங்கால பயிற்சி தொடர்பான விபரம்**

மாவட்டத்தில் செயற்படுத்தப்படும் அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஏனைய சிவில் சமூக அமைப்புக்களின் வேண்டுகோளுக்கிணங்க இலவசமாக நடாத்தப்பட்ட 23 விழிப்புணர்வு நிகழச்சிகள், குறுங்கால பயிற்சிகள் என்பனவற்றில் மொத்தம் 1361 பயனாளிகள் நலனடைந்தனர

.

| தொ.இ | திகதி | நிகழ்ச்சி | வளப்பங்களிப்பு | பயனாளிகள் |
|---|---|---|---|---|
| 01. | 2024.05.13 | தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பாடநெறி அறிமுகம். துமன – பிரதேச செயலக கள உத்தியோகத்தர்கள் | தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் அம்பாறை நிலையம் | 60 |
| 02. | 2024.05.14 | தேசிய பயிலுனர் தொழிற்பயிற்சி நிறுவனம் - அம்பாறை | | 15 |
| 03. | 2024.05.16 | கார்மெல் பாத்திமா கல்லூரி, கல்முனை | | 26 |
| 04. | 2024.05.17 | தமனை பிரதேசய செயலகம் - இளைஞர் மன்றம் | | 45 |
| 05. | 2024.05.21 | தேசிய இளைஞர் சேவை மன்றம் - தொழிற்பயிற்சி அதிகாரசபை | | 40 |
| 06. | 2024.05.22 | ஹார்டி தொழில்நுட்பக் கல்லூரி – அம்பாறை | | 150 |
| | | | | **336** |

**உளவளத்துணை மையத்தின் மூலம் உளவியல் உளவளத்துணைச் சேவைகள் வழங்கல்**

பிரதேச வள நிலையத்தில் செயல்படும் உளவியல் உளவளத்துணை மையத்தின் மூலம் 2024 ஆம் ஆண்டில் 47 பயனாளர்களுக்கு உளவளத்துணைச் சேவைகள் வழங்கப்பட்டன.

| விபரம் | சேவைநாடிகள் எண்ணிக்கை |
|---|---|
| கற்றல் குறைபாடு.்.நடத்தை பிரச்சினை | 13 |
| குடும்ப தகராறு | 08 |
| உளவியல் பிரச்சினைகள் | 07 |
| பொருளாதார பிரச்சினை சார்ந்தது | 05 |
| வேறு | 14 |

**சேவைகளைப் பெறுவோரின் பரிந்துரைகள் / அனுப்பப்பட்ட இடங்கள்**

01. அம்பாறை பொதுமருத்துவமனையின் மனநலப் பிரிவு
02. பிராந்திய மருத்துவமனைகள்
03. காவல் நிலையங்கள்
04. அம்பாறை மாவட்ட நீதிமன்றம்
05. பிராந்திய செயலக அலுவலகம்
06. தன்னார்வ முன்வருகைகள்











**சமூகப்பணி பயிற்சி, ஆய்வு மற்றும் களக்கற்கைக்கான பிரதேச வள நிலையம், தலாவை**



## அறிமுகம்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் தலாவை பிரதேச பயிற்சி நிலையமானது வட மத்திய மகாணத்தில் அநுராதபுர மாவட்டத்தில். தலாவை பிரதேச செயலகத்தில் மொரகொட கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ளது. அநுராதபுரம் குருணாகல் பிரதான வீதியில் தலாவை நகரத்திலிருந்து அநுராதபுரத்தை நோக்கி 2 கி.மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது

இன்றளவில் தலாவை பிரதேச பயிற்சி நிலையத்திடம் 05 ஏக்கர் அளவிலான காணி காணப்படுவதுடன் அதில் இரண்டுமாடிக் கட்டிடமும் அமைந்துள்ளது. பிரதான கட்டிடத்தில் கீழ் மாடியில் அலுவலக அறைகள் 02ம், சிறு தங்குமிட அறைகள் 2ம், 35 மாடிக் கட்டில்கள் கொண்ட பிரிக்கப்பட்ட அறைகள் 02ம் சாப்பாட்டு அறை ஒன்றினையும் கொண்டுள்ளது. மேல் மாடியில சிறு தங்குமிட அறைகள் 02உம் VIP அறை 01ம் விரிவுரை மண்டபமும் உள்ளது.

**ஆரம்பிக்கப்பட்ட வரலாறு**

அநுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சமூக சேவைகள் அமைச்சர் கௌரவ பர்ட்டி பிரேமலால் திஸ்ஸாநாயக்க அவர்களின் முன்மொழிவிற்கேற்ப தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்கான இக்கட்டிடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் நடவடிக்கைகள் இலங்கை ஜனநாயக சோசலிஸ குடியரசின் பாராளுமன்ற கௌரவ சபாநாயகர் பேராசிரியர் கே.பீ. ரத்னாயக்க அவர்களின் பங்களிப்புடன் இலங்கை ஜனநாயக சோசலிஸ குடியரசின் மேதகு ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்க அம்மையாரினால் 1999ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26ம் திகதியில் அமைந்த சுப நேரத்தில் அடிக்கல் நாட்டப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது.

**ஆரம்பித்த நோக்கம்**

2002ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் திகதி சமூக சேவைகள் அமைச்சர் கௌரவ ரவீந்திர சமரவீர அவர்களின் கரங்களினால் இந்நிலையம் திறக்கப்பட்டது. சமூகப்பணிக் கல்வியினை பயிற்சி மற்றும் ஆய்வுப் பிரிவின் பணிகளை இந்நிலையத்தின் ஊடாக பிரதேசத்திற்கு வழங்குவதும் அனைவரது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கும் பிரதேச மட்டத்தில் ஒத்துழைப்பு வழங்குவதும் இத்தலாவை நிலையத்தினை நிறுவியதன் நோக்கம் ஆகும்.

**பிரதேச நிலையத்தின் நோக்கு**

சமூகப்பணிக் கல்வி, பயிற்சி மற்றும் ஆய்வு நடவடிக்கைகளிலும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் விசேட கந்திர நிலையத்தின் ஒரு கிளையாக அனைவரது வாழ்க்கைத் தரத்தினை பண்புரீதியாக மேம்படுத்துவதற்காகன செயற்திறன்மிக்க பங்காளராக ஆகுவது.

**தலாவை கிளையை தங்குமிட நிலையமாக பயன்படுத்தல்**

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் தலாவை பிரதேச பயிற்சி நிலையம் தங்குமிட வசதிகளை வழங்கும் நிலையமாக பயன்படுத்தப்படுகின்றது. பிரதான கட்டிடத்தில் VIP அறை ஒன்றும் (குளிரூட்டப்பட்ட) மற்றும் சிறு அறைகளும் (03 கட்டில்கள்) உள்ளன. இது தவிர 36 பேர் தங்குமிட வசதிகளை வழங்கவும் முடியும். அவ்வாறே 80 ஆசனங்களுடன்கூடிய பிரதான விரிவுரை மண்டபம் (60x30) ஒன்றும் உள்ளது.

நிறுவனத்தினால் நியமிக்கப்படும் விலையின் கீழ் அரச மற்றும் தனியார் துறைகளில் பயிற்சிகளுக்காகவும் தங்குமிட வசதிகளுக்காகவும் நிலையத்தின் தங்குமிட வசதிகள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் நிறுவனத்திற்கு மேலதிக வருமானம் கிடைப்பதுடன் தேசிய மட்டத்தில் பாரியதொரு சேவையும் வழங்கப்பட்டு வருகின்றது. அவ்வாறே தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் களப்பரீட்சயத்தில் ஈடுபடும் மாணவர்களுக்கும் தங்குமிட வசதிகளும் களச் சுற்றுலாக்களுக்காகவும், பயிற்சி நிகழ்ச்சிகளுக்காகவும் வழங்கக்கூடிய நிறுவனத்திற்கு உரித்தான ஒரேயொரு நிலையம் தலாவை பிதேச களக் கற்கைக்கான நிலையமாகும். மேலும் நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற டிப்ளோமா, உயர் டிப்ளோமாக்களுக்காக தூரப் பிரதேசங்களிலிருந்து வருகை தரும் மாணவர்களுக்கான தங்குமிட வசதிகளை வழங்குவதன் ஊடாக மாணவர்களுக்கு பெரும் ஒத்துழைப்பு வழங்கப்படுவதுடன் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காகவும் மாபெரும் வளமாகவும் காணப்படுகிறது.

### 01.நிலைய உத்தியோகத்தர்கள் பற்றிய விபரம்

| தொ.இ | அனுமதிக்கப்பட்ட பதவிப் பெயர் | இருப்பவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | நிலைய பொறுப்பதிகாரி/நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | 01 |
| 02 | முகாமைத்துவ உதவியளார் | 03 |
| 03 | அலுவலக உதவியாளர் | 01 |

### சமூகப்பணி, ஆய்வு மற்றும் களக் கற்கைக்கான பிரதேச வள நிலையம் கிளிநொச்சி




### அறிமுகம்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கிளிநொச்சி பிரதேச பயிற்சி நிலையமானது பழைய பிரதேச செயலக வளாகத்தில் அதற்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்கிவருகின்றது. எமது நிவையமானது A9 பாதைக்க அண்மித்து அமைந்துள்ளது. புரதான கட்டிடத்தில் அலுவலக அறையும், வகுப்பறைகள் இரண்டும் சிறிய தங்குமிட வசதியும் காணப்படுகின்றது.

### 01.நிலைய உத்தியோகத்தர்கள் பற்றிய விபரம்

| தொ.இ | அனுமதிக்கப்பட்ட பதவிப் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | நிலைய பொறுப்பதிகாரி/நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | 01 |
| 02 | முகாமைத்துவ உதவியளார் | 01 |
| 03 | அலுவலக உதவியாளர் | 01 |

**கிளிநொச்சி நிலையத்தின் 2024ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட “சுஹுரு கம்மான” நிகழச்சி**

| இல | பாடநெறி | நிகழச்சிகளின் எண்ணிக்கை | பங்குபற்றுவோர் |
|---|---|---|---|
| 01 | தலைமைத்துவம் தொடர்பான பயிற்சி | 02 | 50 |
| 02 | முதியோருக்கான பயிற்சி நிகழ்ச்சி | 02 | 50 |

**கிளிநொச்சி நிலையத்தின் 2024ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட உளவளத்துணை நிகழச்சிகள்**

| இல | பாடநெறி | நிகழச்சிகளின் எண்ணிக்கை | பங்குபற்றுவோர் |
|---|---|---|---|
| 01 | குழு உளவளத்துணை | 04 | 50 |
| 02 | போதைப்பொருள் பாவனையாளர்களுக்கான உளவளத்துண | 05 | 42 |

**கிளிநொச்சி நிலையத்தின் 2024ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட வேறு நிகழ்ச்சி**

| இல | பாடநெறி | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பங்குபற்றுவோர் |
|---|---|---|---|
| 01 | பாடநெறி பிரபல்யப்படுத்தும் நிகழ்வுகள் | 01 | 350 |
| 02 | மகளிர் தின நிகழ்வுகள் | 01 | 25 |
| 03 | உள நலம் தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்வுகள் | 01 | 55 |
| 04 | பெரியோர் மற்றும் சிறுவர்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்வுகள் | 03 | 100 |

# சமூக அபிவிருத்தி கொள்கை, ஆய்வு மற்றும் வெளியீட்டுப் பிரிவு

## 2024ம் ஆண்டில் ஜனவரி மாதம் 31ம் திகதிவரையான முன்னேற்றம்

| தொ. இ | நிகழச்சியின் பெயர் | நிதி முன்னேற்றம் ரூ. | | |
|---|---|---|---|---|
| | | மொத்தத் தொகை | செலவு | மிகுதி |
| 01 | சமூக விஞ்ஞான இணையச் சஞ்சிகை 2 மற்றும் சமூகப்பணி இணைய சஞ்சிகை 02, செய்தித்தாள் 2உம் பிரசுரிக்கப்பட்டன | 130,000.00 | 100,000.00 | 30,000.00 |
| 02 | சமூகப்பணி தொடர்பான 3வது சர்வதேச மாநாடு நடாத்தல் | 500,000.00 | 820,000.00 | |
| 03 | அலுவலக அபிவிருத்தி நிகழ்ச்சிகள் 07 நடாத்துதல் | 450,000.00 | 310,000.00 | 140,000.00 |
| 04. | பட்டதாரிகளுக்கான 1ம் ஆய்வு மாநாடு | 200,000.00 | 180,000.00 | 20,000.00 |
| 05. | தற்கால சமூக பிரச்சினைகள் தொடர்பான ஆய்வு (காலநிலை மாற்றம், உளநலம், இலங்கை சமூகபப்ணியாளர்களின் கடமைகளும் பொறுப்புக்களும்) | 420,000.00 | 210,000.00 | 210,000.00 |
| 06. | புத்தக வெளியீடும் அறிவுசார் உரையாடலும் | 300,000.00 | - | 300,000.00 |
| | **மொத்தம்** | **2,000,000.00** | **1,620,000.00** | **380,000.00** |

**பிரிவின் நோக்கு**

சமூகப்பணி, சமூக நலன்புரி மற்றும் சமூக அபிவிருத்தி பாடத்துறையுடன் தொடர்பான பல்வேறு ஆய்வுகளையும் கற்றல்களையும் மேற்கொள்வதற்கும், அதனுடன் தொடர்பான ஆய்வறிக்கை மற்றும் கல்வி வெளியீடுகளை வெளியிடுவதும், பரந்தளவில் இலங்கையில் சமூக நலன்புரி மற்றும் அபிவிருத்தி பாடத்துறையுடன் தொடர்பான சமூக கொள்கைகளை உருவாக்குவதற்கு பங்களிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதுமாகும்.

**ஆய்வுப் பிரிவின் செயற்பாடுகள்**

- சமூக ஆய்வு மற்றும் கருத்தாய்வு துறைகளை அடையாளம் காணலும் சமூகப்பணி மற்றும் சமூகப்பணி மற்றும் சமூக கொள்கைகளை தயாரிப்பதற்கு தேவையான திட்டங்களை உருவாக்குதலும்
- சமூக ஆய்வுகளில் ஈடுபட்டு, நிலவுகின்ற சமூக பிரச்சினைகள் தொடர்பாக கவனம் செலுத்தி அரச கொள்கை மற்றும் பல்வேறு துறைகளுக்கு தேவையான தகவல்களை ஏற்படுத்திக்கொடுத்தல்
- உரிய அமைச்சுக்களுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி புறக்கணிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தேவையான வசதிகளையும் சேவைகளையும் வழங்குவதற்கு தேவையான தகவல்களை வழங்குதல்
- அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களுடன் ஒன்றிணைத்து பண்புசார் மற்றும் எண்ணிக்கை சார் ஆய்வுகளை மேற்கொள்ளுதல்
- ஆய்வு முன்மொழிவுப் பத்திரத்தினை தயாரித்தல், முன்வைத்தல், தரவுபகுப்பாய்வு செய்தல் மற்றும் ஆய்வறிக்கை தயாரித்தல்
- களத்திற்கு சென்று தகவல்களை சேகரித்தல் மற்றும் அவற்றின் இரகசியத்தன்மையை பாதுகாத்தல்
- சமூக ஆய்வுகளுடன் தொடர்பான தரவு வங்கியினை பேணுதல்

## ஆய்வுப்பிரிவினால் வெளியிடப்படும் கல்வி வெளியீடுகள்

### இலங்கை சமூகப்பணி சஞ்சிகை (Sri Lanka Journal of Social Work)

சமூகப்பணிப் பாடமானது இந்நாட்டில் இதுவரை பிரபல்யமடையாத ஒன்றாக இருப்பினும் இன்றளவில் அப்பாடத்திற்கான தேவை உருவாகி வருகின்றது. அதனால் சமூகப்பணி பாடத்துறை சார்ந்த அறிவினை கல்வியியலாளர்கள் மத்தியில் பரவச் செய்வதற்காக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் சமூக அபிவிருத்திக் கொள்கை, ஆய்வு மற்றும் வெளியீட்டுப் பிரிவினால் வருடாந்தம் "சமூகப்பணி சஞ்சிகை" வெளியிடப்படுகிறது. இச்சஞ்சிகை ஊடாக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கல்விசார் உத்தியோகத்தர்களின் இலக்கிய மற்றும் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடப்படுவதோடு அது கல்வியியலாளர்கள் மற்றும் சமூகப்பணி பாடத்துறையில் நுழையும் புதியவர்களுக்கு வழிகாட்டியாகும்.

2024ம் ஆண்டு வெளியிடப்பட்ட இச்சஞ்சிகையின் பிரதான தொணிப்பொருள் "**Shared Future for Transformative Change**" என்பதாகும். அரையாண்டு வெளியீடாகிய அதனை மும்மொழியிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. துறைசார்ந்தவர்களின் மீளாய்வாக (Peer Reviewed) வெளியிடப்பட்ட இச் சஞ்சிகையில் சர்வதேச சஞ்சிகை தராதரத்திற்கேற்ப தயாரிக்கப்படுகின்றன. சமூகப்பணித் துறைக்கு ஏற்ற மீளாய்வுக்குழுவினால் இரு தரம் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.




### இலங்கை சமூக அறிவியல் சஞ்சிகை (Sri Lanka Journal of Social Sciences)

சமூக அறிவியல் இதழ், அரை ஆண்டு அடிப்படையில் பல துறை சார்ந்த கல்வி இதழாக வெளியிடப்படுகிறது. இது பரந்த அளவிலான சமூக அறிவியல் தலைப்புகளை உள்ளடக்கியது மற்றும் ஆய்வாளர்கள் மற்றும் அறிஞர்களுக்கு ஆய்வு மற்றும் கல்வி எழுத்துக்கான இடத்தை வழங்குகிறது. அரை ஆண்டு இதழாக, இது சமூக அறிவியல் துறையில் அறிவைப் பரப்புவதற்குத் தேவையான கட்டமைப்பை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த இதழ், துறையின் முன்னேற்றத்தையும் சமகால ஆராய்ச்சி இலக்கியத்தைப் பரப்புவதையும் எளிதாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது, இது உள்ளூர் மற்றும் சர்வதேச ஆய்வாளர்கள் மற்றும் கல்வித்துறை படைப்பாக்கத்தில் ஈடுபட்டுள்ள அறிஞர்களுக்கு தங்கள் துறைக்கு பொருத்தமான அறிவார்ந்த படைப்புகளுக்கு பங்களிக்கவும் வெளியிடவும் உதவுகிறது. இது கல்வி ஈடுபாட்டிற்கான ஒரு குறிப்பிடத்தக்க தளமாக அமைகிறது.




### சமூகப்பணி மாணவர் சஞ்சிகை (Student Journal of Social Work)

சமூகப்பணி மாணவர் சஞ்சிகையானது 2024ம் ஆண்டிற்காக சமூகப்பணித் துறையில் பல்வேறு பாடத்துறைகளின் கீழ் கல்வியாளர் கலந்துரையாடலை கட்டியெழுப்புவதற்காக சமூகப்பணி பட்டத்தினை எதிர்பார்த்திருப்பவர்களின் கல்விசார் ஆக்கங்களை வெளியிடுகின்றது. வருடாந்த சமூகபப்ணி மாணவர் சஞ்சிகையானது சமுதாய அபிவிருத்திக்கான சமூகப்பணி இடையீடு எனும் தொணிப்பொருளின் கீழ் மும்மொழிக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு க்லவி மற்றும் ஆய்வு ஆக்கங்களின் வெளியீடாக அமைகிறது. கல்வி இலக்கியப் புலமையை ஏற்படுத்துவதற்காக துறைசார் அறிவினை பரிமாறிக்கொள்வதன் ஊடாக இலங்கை சமூகச் சூழலில் சமூகப்பணி அறிவினை சமூகமயப்படுத்தும் நோக்கில் இச்சஞ்சிகை தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் வருடாந்தம் வெளியிடப்பப்படுகிறது.




### செய்தித்தாள் (Newsletter)

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் வருடாந்தம் செய்தித்தாள் வெளியிடப்படுகின்றது. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் தொடர்பாக 2024ம் ஆண்டு குறித்த விபரங்கள் உள்ளடக்கி இவ்வெளியீடு தயாரிக்கப்பட்டுள்ளது. செய்தித்தாளில் பிரதானமாக நிறுவனத்தின் சமூகப்பணிக் கல்லூரி, பயிற்சிப் பிரிவு மற்றம் ஆய்வுப் பிரிவி ஆகிய கல்வித்துறை சார் பிரிவுகளினதும் நிதி மற்றும் நிருவாக பிரிவினதும் தற்கால தகவல்கள் அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்றது. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கல்வி, ஆய்வு மற்றும் பயிற்சி நிகழச்சிகள் தொடர்பாக சமுதாயத்தினை விழிப்பூட்டுவது இச் செய்தித்தாளின் பிரதான நோக்கமாகும்.




### உத்தியோகத்தரின் திறன் மேம்பாட்டுத் திட்டம் – 2024

இந்தத் திட்டம் ஆய்வு மற்றும் வெளியீட்டுப் பிரிவில் உள்ள கல்விசார் ஊழியர்களின் திறன்களை வளர்க்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டது. இந்த கவனம் செலுத்தப்பட்ட பகுதிகளைத் அடிப்படையாகக் கொண்டு, ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவின் கல்வி ஊழியர்கள் களனிப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட பணியாளர் திறன் மேம்பாட்டுத் திட்டத்தில் பங்கேற்றனர்.

களனிப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் உத்தியோகத்தர் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கம், இலங்கையின் உயர்கல்வி அமைப்பிற்குள் தனிநபர் மற்றும் நிறுவன திறன்களை மேம்படுத்தும் கல்வி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை ஆதரிப்பதாகும். உத்தியோகத்தர்களுக்கான பயிற்சியை வழங்குவதன் மூலம், பல்கலைக்கழக அமைப்பு மற்றும் தொழில்முறை கல்விச் சூழலில் திறம்பட செயல்படத் தேவையான திறன்கள் மற்றும் ஆற்றல்களை வளர்க்க இத் திட்டம் உதவுகிறது. ஆந்த க்லவி.்.நிருவாக உத்தியோகத்தர்களின் கற்றல் மதிப்பீடு, ஆய்வு மற்றும் பாடவிதானம் தயாரித்தல், தகவல் மற்றும் தொலைதொடர்பு தொழில்நுட்பத்தின் பயன்பாடு, நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் போன்ற துறைகளில் திறன்களை மேம்படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

### சமூகப் பணி  இளங்மாணி ஆய்வுக் கருத்தரங்கம் (URSSW) – 2024

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் (NISD) ஏற்பாடு செய்த USRSSW - 2024, இலங்கை பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த இளங்கலை மாணவர்கள், மதிப்பிற்குரிய அறிஞர்கள் மற்றும் ஆய்வாளர்கள் தங்கள் மதிப்புமிக்க உள்ளார்ந்த எண்ணங்கள், சமீபத்திய ஆய்வு கண்டுபிடிப்புகள், கள நடைமுறை அனுபவங்கள் மற்றும் ஆக்கத்திறன் அறிவகள் என்பவற்றை வழங்கவும் பகிர்ந்து கொள்ளவும் ஒரு தனித்துவமான தளத்தை வழங்கியது. இந்த வருடாந்த கருத்தரங்கு, கல்விசார் சிறப்பு மற்றும் கருத்துப் பரிமாற்றம், மாறுபட்ட கண்ணோட்டங்கள் மற்றும் முன்னோடி ஆய்வுகளை வளர்க்கும் அறிவுசார் ரீதியாக தூண்டும் சூழலை உருவாக்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி, முறையான கல்விசார் ஒன்றுகூடலின் தரத்தை நிலைநிறுத்துகிறது.

இந்த ஆய்வுக் கருத்தரங்கு, ஆர்வமுள்ள இளங்கலை ஆய்வாளர்கள் மற்றும் கல்வியாளர்களுக்கு, நிறுவனங்களுடன் தொடர்புகளை உருவாக்கவும், வளர்ந்து வரும் ஆய்வு ஆர்வங்களை வெளிப்படுத்தவும், சமூகப் பணி மற்றும் தொடர்புடைய சமூக அறிவியல் தலைப்புகளில் தங்கள் ஈடுபாட்டை ஆழப்படுத்தவும் ஒரு முக்கிய வாய்ப்பை வழங்குகிறது. மேலும், இது இளங்கலை மாணவர்களின் கல்வி மற்றும் தொழில்முறை வளர்ச்சிக்கு கணிசமாக பங்களிக்கிறது.

**இந்த கருத்தரங்கின் முக்கிய கருப்பொருள்:- "எதிர்கால உலகத்திற்கான சமூகப் பணிகளின் நடைமுறைகள் மற்றும் ஊக்குவித்தல்"**

கலாநிதி. பிரியங்வதா வணிகசூரிய களனி பல்கலைக்கழக நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறையின் தலைவர், "ஆய்வின் எதிர்காலம்: அறிவார்ந்த பணிகளில் இடைவெளி அடையாளத்தை செயற்கை நுண்ணறிவு AI எவ்வாறு மாற்றுகிறது" என்ற தலைப்பில் முக்கிய உரையை நிகழ்த்தினார். அறிவு இடைவெளிகளை மிகவும் துல்லியமாகவும் திறமையாகவும் அடையாளம் காண உதவுவதன் மூலம் செயற்கை நுண்ணறிவு ஆய்வு நிலப்பரப்பில் எவ்வாறு புரட்சியை ஏற்படுத்துகிறது என்பதை எடுத்துக்காட்டுவதே இந்த உரையின் நோக்கமாகும். தற்போதுள்ள இலக்கியங்களை வரைபடமாக்குதல், ஆராயப்படாத பகுதிகளைக் கண்டறிதல் மற்றும் கல்வி ஆய்வின் ஒட்டுமொத்த தரம் மற்றும் தாக்கத்தை மேம்படுத்துவதில் AI கருவிகள் எவ்வாறு அறிஞர்களுக்கு உதவ முடியும் என்பதை இது ஆராய்வதாக அமைந்தது.

இந்த கருத்தரங்கின் போது, பின்வரும் மூன்று தொழில்நுட்ப அமர்வுகளின் கீழ் 18 ஆய்வுச் சுருக்கங்கள் வழங்கப்பட்டன:

1. தொழில்நுட்ப அமர்வு 01: கிராமப்புற அபிவிருத்தி, பாலினம் மற்றும் சமூக உள்ளடக்கம்
2. தொழில்நுட்ப அமர்வு 02: மனநலம், கல்வி மற்றும் சமூகப் பணி தலையீடுகள்
3. தொழில்நுட்ப அமர்வு 03: கிராமப்புற அமைப்பினில் இடம்பெயர்வு, போதைப்பொருள் துஷ்பிரயோகம் மற்றும் சமூகப் பிரச்சினைகள்

## 3 வது சர்வதேச சமூகப் பணி மாநாடு - 2024

ICSW என்பது சமூகப் பணித் துறையைச் சேர்ந்த சிந்தனையாளர்கள் மற்றும் நிபுணர்களை ஒன்றிணைக்கும் வருடாந்த நிகழ்வாகும். எமது மாநாடு நவீன அணுகுமுறைகளை ஆராய்வதற்கும், அறிவைப் பரிமாறிக் கொள்வதற்கும், உலகளவில் சமூகங்கள் எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொள்வதற்கும் ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது. ஒத்துழைப்பின் சக்தியை நாங்கள் நம்புகிறோம், மேலும் புவியியல் எல்லைகளைத் தாண்டிய வலைப்பின்னல்களை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். புதிய சகாப்தத்தில் சமூகப் பாதுகாப்பு மற்றும் பகிரப்பட்ட மாற்றத்தில் குறிப்பிட்ட கவனம் செலுத்தி, உலகளாவிய தொழிலாக சமூகப் பணி குறித்த கல்வி உரையாடலை எளிதாக்குவதே மாநாட்டின் நோக்கமாகும்.

3வது சர்வதேச சமூகப் பணி மாநாடு, சமகால 2024 சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உலகளாவிய உரையாடல், புத்தாக்கம் மற்றும் ஒத்துழைப்புக்கான துடிப்பான தளமாக செயல்படுகிறது. 21 ஆம் நூற்றாண்டில் சமூகப் பாதுகாப்பு: நிலைமாறும் மாற்றங்களுக்கான பகிரப்பட்ட ஒத்துழைப்பு" என்ற கருப்பொருளின் கீழ், இந்த மாநாடு கல்வியாளர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களை ஒன்றிணைத்து சமூக நலனுக்கான உள்ளடக்கிய மற்றும் நிலையான அணுகுமுறைகளை ஆராய்கிறது. உலகளாவிய சமூகப் பணிகளில் புகழ்பெற்ற தலைவரான கலாநிதி. மச்சிகோ ஓஹாராவின் முக்கிய உரை, ஒரு துடிப்பான கருத்துப் பரிமாற்றத்திற்கான தொனியை அமைக்கிறது.

ஆறு தொழில்நுட்ப அமர்வுகள் முக்கியமான களங்களை உள்ளடக்கியது
தொழில்நுட்ப அமர்வு 01: பொருளாதார சவால்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு
தொழில்நுட்ப அமர்வு 02: சமூகப் பணி மற்றும் சமூக மேம்பாடு
தொழில்நுட்ப அமர்வு 03: மன ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு

தொழில்நுட்ப அமர்வு 04: காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள்
தொழில்நுட்ப அமர்வு 05: கல்வி மற்றும் டிஜிட்டல் மாற்றம்
தொழில்நுட்ப அமர்வு 06: சுகாதாரம் மற்றும் சமூகப் பராமரிப்பு

- ஒவ்வொரு அமர்வும் வளர்ந்து வரும் போக்குகள், கொள்கை கண்டுபிடிப்புகள் மற்றும் சமூகம் சார்ந்த தீர்வுகள் பற்றிய ஆழமான கலந்துரையாடலாக அமைந்தன. எல்லைகளைக் கடந்து அறிவைப் பாலமாக இணைப்பதன் மூலம், ICSW - 2024, மிகவும் நியாயமான மற்றும் மீள்தன்மை கொண்ட எதிர்காலத்தை வடிவமைக்க, பல்தரப்பு மற்றும் பலதுறை கூட்டாண்மைகளின் மதிப்பை வலியுறுத்துகிறது.



# தர உறுதிப்படுத்தல் மையம் – தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் தர உறுதிப்படுத்தல் மையமானது (CQA), தர உத்தரவாதம் மற்றும் சான்றுரைப்புச் சபை (QAAC) வழிகாட்டுதலின் கீழ், இலங்கையின் தேசிய கல்வித்தர உறுதிப்படுத்தல் கட்டமைப்பிற்கு ஏற்ப தர உறுதிப்படுத்தல் நடவடிக்கைகளை உருவாக்கி செயல்படுத்தும் நோக்கில் நிறுவப்பட்டது. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், கல்வி அமைச்சும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் (UGC) அங்கீகரித்த முன்னணி அரசு சாரபற்ற உயர் கல்வி நிறுவனமாக இருப்பதால், தர உறுதிப்படுத்தல் மையம் (CQA), தேசிய அங்கீகார தராதரங்களுக்கு ஏற்ப கல்வித் தரநிலைகளை முன்னேற்றுவதற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

**தர உறுதிப்படுத்தல் மையத்தின் பணி**

எங்களின் பணி என்பது தரமான மையக் கல்வியை பராமரித்து மேம்படுத்துவதும், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பணி மற்றும் தூர நோக்கிற்கு ஏற்ப கல்வித் தரநிலைகளின் அடிப்படையில் அனைத்து கற்பித்தல், கற்றல் மற்றும் மாணவர் ஆதரவு சேவைகளுக்கான தொடர்ச்சியான மேம்பாட்டு செயல்முறையை நிலைத்தன்மையுடன் முன்னெடுத்துச் செல்வதுமே ஆகும்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் தர உறுதிப்படுத்தல் மையம், நிறுவனத்தினுள் கற்பித்தல் மற்றும் கற்றல் தேர்ச்சியினை ஊக்குவிக்கும் தரமான கலாச்சாரத்தை நிறுவிப் பராமரிக்க அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

தர உறுதிப்படுத்தல் மையத்தில், கல்வியின் சிறப்புத்தன்மையை உறுதிசெய்வதற்கும், தொடர்ச்சியான கல்வி மேம்பாட்டு பண்பாட்டை உருவாக்குவதற்கும் நாங்கள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளோம். எங்கள் முக்கிய கவனம் கற்பித்தல், கற்றல் மற்றும் ஆராய்ச்சியின் தரத்தை மேம்படுத்துவதிலும், எங்களின் மாணவர்களுக்கும் பணியாளர்களுக்கும் சிறந்த திறன்களை அடிப்படையாகக் கொண்ட உயர்கல்வி அனுபவத்தை வழங்குவதிலும் உள்ளது.

**எமது நோக்கம்**

- நிறுவனத்தின் செயல்முறைகள் தர உறுதிப்படுத்தல் முறைகளுக்கும் தேசிய தரநிலைகளுக்கும் ஏற்ப நடப்பதை உறுதிப்படுத்தல்.
- தர உறுதிப்படுத்தல் நடைமுறைகளின் தொடர்ச்சியான பயன்பாட்டின் மூலம் கல்வித் தரத்தை மேம்படுத்தல்.
- தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கல்வி திட்டங்களும் சேவைகளும் சார்ந்த குறிப்பிட்ட தேவைகள் மற்றும் நோக்கங்களுக்கு ஏற்ப தர உறுதிப்படுத்தல் செயல்முறைகளை பராமரித்து மேம்படுத்தல்.
- தர உறுதிப்படுத்தல் தொடர்பான வழிகாட்டுதல்களை உருவாக்குவதன் மூலம் தரமான கற்பித்தல், கற்றல் ஏற்படுத்தி மற்றும் கல்வியை மேம்படுத்தி, நிறுவனத்தின் பணி மற்றும் இலக்குகளுக்கான வசதிப்படுத்தல்களை மேற்கொள்ளல்.

**தர உறுதிப்படுத்தல் மையத்தின் பணிகள் மற்றும் பொறுப்புகள்**

- தர உறுதிப்படுத்தல் தொடர்பான வழிகாட்டுதல்களை உருவாக்குவதன் மூலம் தரமான கற்றல், கற்பித்தலை ஏற்படுத்துவதுடன் கல்வியை முன்னேற்றி, நிறுவனத்தின் பணி மற்றும் இலக்குகளை எளிதாக்கல்.
- நிறுவனத்தின் அனைத்து தர உறுதிப்படுத்தல் நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தல்.

- தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பிரிவுகள் மற்றும் துறைகளுக்கு தர உறுதிப்படுத்தல் தொடர்பான ஆலோசனைகள் வழங்கல்.
- தர உறுதிப்படுத்தல் செல்களை நிறுவி, அவற்றின் பணி மற்றும் பொறுப்புகளை வரையறுத்தல்.
- நிறுவனத்தின் அனைத்து நிலைகளிலும் திறன் மேம்பாடு மற்றும் தர உறுதிப்படுத்தல் கலாச்சாரத்தை ஊக்குவிக்க, கருத்தரங்குகள், மாநாடுகள் மற்றும் பொருத்தமான பயிற்சிகளை ஏற்பாடு செய்தல்.
- கற்பித்தல் மற்றும் கற்றலை மேலும் மேம்படுத்த, தற்போதுள்ள செயல்முறைகளை மறுபரிசீலனை செய்தல்.
- தர உறுதிப்படுத்தல் தொடர்பான மதிப்பீடுகளை செயல்படுத்தி, பின்னூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அரச சார்பற்ற உயர்கல்வித் துறை மற்றும் பிற தர உறுதிப்படுத்தல் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு செய்தல்.
- இணையத்தள மதிப்பீட்டில் தரவரிசையை மேம்படுத்த, இணையதளத்தை புதுப்பித்தல்.

2024 ஆம் ஆண்டு – தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் (NISD) தர உறுதிப்படுத்தல் மையத்தினால் (CQA), நிறுவனத்தின் தர உறுதிப்படுத்தலை வலுப்படுத்தவும், கல்விசார் உத்தியோகத்தர்களின் திறன்களை மேம்படுத்தவும் மற்றும் தேசிய உயர்கல்வித் தரநிலைகளுக்கு ஏற்பச் செயல்படவும், பல்வேறு முக்கியமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. அவை பின்வருமாறு:

1. பங்குதாரர்களின் உளவளத்துணை தொடர்பான பயிற்சிப்பட்டறை – 2024 ஜனவரி 24, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்: புதிய பட்டப் பாடநெறிகளுக்கான சாத்தியம் மற்றும் தேவைகள் குறித்து பங்குதாரர்களின் பங்கேற்பு.
2. தர உறுதிப்படுத்தல் செயல்முறை மேம்பாடு குறித்த பயிற்சிப் பட்டறை மற்றும் சிறப்பு ஒன்றுகூடல் – 2024 ஜூன் 28: மூலோபாய செயல் திட்ட மேம்பாட்டில் ஈடுபட்ட பணியாளர்கள், AAB மற்றும் ஆளும் சபை ஆகியோருக்கானது.
3. SER எழுதுதல், நிறுவன மதிப்பாய்வு மற்றும் பாடத்திட்ட மதிப்பாய்வு தொடர்பான பயிற்சிப் பட்டறை – 2024 ஜூலை 11, பேராசிரியர் சிரந்த ஹீன்கெந்த தலைமையில்: தர உறுதிப்படுத்தல் செயல்முறைகளில் பணியாளர் திறன் மேம்படுத்தல் மற்றும் வெளிப்புற மதிப்பாய்வுகளுக்கான ஏற்பாடு.
4. LMS மற்றும் இணையவழி வசதிகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை – 2024 அக்டோபர் 29, NISD: டிஜிட்டல் கல்வியை மேம்படுத்துவதற்காக கலாநிதி தரங்க ரத்நாயக்க தலைமையில் நடாத்தப்பட்டது.

இந்த மையத்தின் நடவடிக்கைகளுக்காக 2024 ஆம் ஆண்டில் நிதியமைச்சக ஒதுக்கீட்டிலிருந்து ரூ. மில்லியன் 4.12 செலவிடப்பட்டுள்ளது.

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள்**

**தர உறுதிப்படுத்தல் மையம்**

நிதியமைச்சின் ஒதுக்கீடுகளுக்கு மேலாக, கீழ்க்காணும் திட்டங்களுக்காக ரூ. மில்லியன் 7.36 தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன நிதியிலிருந்து செலவிடப்பட்டது:

1. புதிய பட்டப்படிப்பு பாடத்திட்டங்களை உருவாக்கி, உயர்கல்வி அமைச்சிற்குச் சமர்ப்பித்தல்.
2. உயர்கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட நிறுவன மதிப்பாய்வில் (Institutional Review) பங்கேற்பு மற்றும் அதற்கான கட்டணம் செலுத்தல்.
3. நிறுவனத்திற்கான புதிய இணையதளத்தை உருவாக்கி நிறைவு செய்தல்.
4. Wing B கட்டடத்தின் நெட்வொர்க் அமைப்பை நிறைவு செய்தல்.

**சமூகப்பணி கல்விப் பிரிவு**

இத் துறையானது, புதிய மேற்படிப்பு திட்டங்களைத் தொடங்கும் நோக்கில் நிறுவப்பட்டது. இதுவரை, காலாநிதி, முதுதத்துவமாணி, மற்றும் முதுமாணி திட்டங்களுக்கான பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்காக ரூ. மில்லியன் 0.85 தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன நிதியிலிருந்து செலவிடப்பட்டது.

**மானுடவியல் மற்றும் முதுமையியல் கல்விப் பிரிவு**

புதிய பட்டப்படிப்புகளை ஆரம்பிப்பதற்காக நிறுவப்பட்ட இந்தப் பிரிவு, ம் சிறப்பு பானுடவியல் பட்டம் மற்றும் முதுமையியல் சிறப்பு பட்டத்திற்கான திருத்தப்பட்ட முன்மொழிவுப் பத்திரங்களை தயாரித்து உயர் கல்வி அமைச்சிற்கு சமர்ப்பித்துள்ளது. இதற்காக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன நிதியிலிருந்து ரூ. மி. 0.12 செலவிடப்பட்டுள்ளது.

**சமூக அறிவியல் மற்றும் சமூக அபிவிருத்தி கல்விப் பிரிவு**

சமூக அறிவியல் சிறப்பு பட்டப்படிப்பிற்கான திருத்தப்பட்ட முன்மொழிவுப் பத்திரங்களை உயர் கல்வி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ. மி. 0.071 தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ளது.

**உளவியல் மற்றும் உளவளத்துணை கல்விப் பிரிவு**

புதிய பட்டப்படிப்புகளை ஆரம்பிப்பதற்காக நிறுவப்பட்ட இப் பிரிவு, உளவியல் மற்றும் உளவளத்துணை தொடர்பான பட்டப்படிப்பிற்கான திருத்தப்பட்ட பாடத்திட்டத்தை ளுஊஐருஏ குழுவிற்கு சமர்ப்பித்து, அவர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் மறுபடியும் தயாரித்து சமர்ப்பித்துள்ளது. இதற்காக ரூ. மி. 0.133 தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ளது.

**மாணவர் நலன்புரி பிரிவு**

மாணவர்களின் நலனுக்காக 2024 ஆம் ஆண்டில் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன நிதியிலிருந்து பல்வேறு பயிற்சிப் பட்டறைகள் மற்றும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

| தொ.இ | நிகழ்ச்சி | திகதி | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | யோகா மற்றும் mindfulness தொடர்பான நிகழ்ச்சி | 2024.11.21 | 100 |
| 02 | ஆளுமை விருத்தி நிகழ்ச்சி | 2024.12.11 | 100 |
| 03 | ஊக்கப்படுத்தல் நிகழ்ச்சி | 2024.12.22 | 100 |

இதற்கு அப்பால் மாணவர் நலன்புரிச்சேவை நிலையத்தினை அழகுபடுத்தப்பட்டதுடன் அதற்காக 2024ம் ஆண்டில் மாணவர் நலன்புரி சேவைக்காக ரூ. மில்லியன் 0.134 செலவிடப்பட்டுள்ளது.


RENUKA JEYARATHNE
YOGA & MINDFULNESS
WORKSHOP
Physical and Mental Well-Being Development Program for Students of NISD
21 November 2024
At 09:00 AM - 12 noon
NISD Premises
Organized By :
Student Supportive Service Center









**ஆளுமை வளரச்சி நிகழ்ச்சி**








**பாடத்திட்ட மேம்படுத்தல் மையம்**

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பாடத்திட்ட மேம்படுத்தல் மற்றும் மதிப்பாய்வு தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட செயல்முறைகள், பாடத்திட்டக் கொள்கைகள் மற்றும் விதிமுறைகளுக்கு ஏற்ப நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்காக நிறுவப்பட்ட நிரந்தர மையமாகும்.

**அமைப்பு**

இம்மையம் மூன்று உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டு, தர உத்தரவாத மையத்தின் கீழ் செயல்படுகிறது.

**கடமைகள் மற்றும் பொறுப்புகள்**

1. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் வழிகாட்டுதலின் அடிப்படையில் சான்றிதழ், டிப்ளோமா மற்றும் பட்டப்படிப்புகளுக்கான பாடத்திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
2. அனைத்து புதிய பாடத்திட்டங்கள், பாடநெறிகள் அல்லது நடைமுறையில் உள்ள பாடத்திட்டங்களுக்கு திருத்த மதிப்பாய்வு மற்றும் மதிப்பீடு செய்து பரிந்துரை அறிக்கைகள் தயாரித்தல்.
3. பாடத்திட்டங்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு உரிய துறைகளுக்கு ஆலோசனையும் ஆதரவையும் வழங்குதல்.
4. பாடத்திட்ட விடரங்கள் குறித்து சம்பந்தப்பட்ட துறைகள் மற்றும் பங்குதாரர்களுடன் கலந்துரையாடி தேவையானபோது கேள்விகளுக்கு பதிலளித்தல்.
5. பாடத்திட்ட மேம்படுத்தலில் உள்ள போக்குகள் மற்றும் தொடர்புடைய கொள்கைகளை ஆய்வு செய்தல்.
6. பாடத்திட்ட மேம்பாடுகளை நிறுவனத்தின் இணையதளம் மூலம் தகவலறியச் செய்தல்.
7. தேவைப்படும் சந்தர்ப்பங்களில், மையத்தின் செயல்பாடுகள், பொறுப்புகள், கொள்கைகள் மற்றும் செயல்முறைகள் குறித்து உபகுழு உறுப்பினர்களை அறிவித்தல்.
8. பாடத்திட்ட கையேடுகளில் உள்ளடக்கம் மற்றும் தொடர்புடைய விவரங்களை உருவாக்கும் போது தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.
9. பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன், மையத்தின் நோக்கங்களை முன்னெடுக்கக்கூடிய நிபுணர்களை கூட்டங்களுக்கு அழைத்தல்.
10. மையத் தீர்மானங்களுக்கு ஏற்ப அறிக்கைகள், புதிய படிவங்கள், மாதிரிகள் மற்றும் பிற ஆவணங்களை தயாரித்தல்.
11. பாடத்திட்ட மையக் கூட்டங்களை முறையாக நடத்துதல்.
12. பீடக் குழுக் கூட்டங்களில் மேற்கண்ட முடிவுகளை அறிக்கை செய்தல்.

2024 ஆம் ஆண்டுக்கான மதிப்பாய்வு செய்யப்பட்ட பட்டப்பாடநெறி, டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகள் தொடரபான தகவல்கள் பின்வருமாறு

**பட்டப்பாடநெறிகள்**

1. சமூகப்பணி பட்டப்பாடநெறி
2. உளவியல் மற்றும் உளவளத்துணை பட்டப்பாடநெறி
3. மானுடவியல் மற்றும் முதுமையியல் பட்டப்பாடநெறி
4. சமூக அறிவியல் மற்றும் சமூக அபிவிருத்தி பட்டப்பாடநெறி

**டிப்ளோமா**

5. ஆங்கில டிப்ளோமா

**சான்றிதழ் பாடநெறிகள்**

6. சமூகப்பணி சான்றிதழ் பாடநெறி
7. சிறுவர் மையப்படுத்தப்பட்ட சமூக அபிவிருத்தி சான்றிதழ் பாடநெறி
8. உளவளத்துணை சான்றிதழ் பாடநெறி
9. ஆய்வுமுறை மற்றும் கல்வியாளர் எழுத்தாக்க சான்றிதழ்

மேற்கண்ட பாடத்திட்டங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டு, அதனுடன் தொடர்புடைய அறிக்கைகள் தர உத்தரவாத மையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வந்த பாடத்திட்ட மேம்படுத்தல் குழுவிற்கு பதிலாக புதிய பாடத்திட்ட மேம்படுத்தல் மையம் நிறுவுவதற்கு நிருவாகக் குழு முடிவு செய்தது. இதற்காக ரூ. 1 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த நிதியில் இருந்து ரூ. 650,000 மதிப்பிலான ஒரு மடிக்கணினி, ஒரு மல்டிமீடியா மற்றும் ஒரு டெஸ்க்டாப் கணினி வாங்கப்பட்டது.

**நூலகம்**

நூலக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நூலகத்தை டிஜிட்டல் மயமாக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளுக்காக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் ரூ. மி. 0.564 செலவிட்டுள்ளது.

**பாலினக் கல்விக்கான மையம்**

2024.01.09 அன்று பாலினக் கல்விக்கான மையம் ஆரம்பிக்கப்பட்டது. நிறுவனத்தின் தொலைநோக்கு மற்றும் பணி நோக்கத்தின்படி, இம்மையத்தின் ஆண்டு செயற்திட்டம் பின்வருமாறு செயல்படுத்தப்பட்டது:

1. 2024.02.05 அன்று, களனி பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி அநுசா எதிரிசிங்ஹ தலைமையில் முதல் ஆலோசனைக்குழுக் கூட்டம் நடைபெற்றது.
2. பாலினம் தொடர்பா அடிப்படை அறிவினை வழங்குவதற்காக 2024.03.09 அன்று, களனி பல்கலைக்கழக பாலினக் கல்வி மையத்தினால் ஆரம்பிக்கப்பட்ட ”Gender and Cyber Violence Training Workshop”-இல், இம்மையத்தின் மாணவர்கள் மற்றும் கற்பித்தல்/நிர்வாக ஊழியர்கள் பங்கேற்றனர்.
3. பாலினக் கல்வி மையத்தின் கீழ் Gender Club ஆரம்பிக்கப்பட்டு, 308 மாணவர்கள் உறுப்பினர்களாக இணைந்து பாலினம் சார்ந்த நிகழ்ச்சிகள் மற்றும் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டனர்.
4. சர்வதேச மகளிர் தினத்திற்காக, மகளிர், சிறுவர்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு ஏற்பாடு செய்த இரு நாள் நிகழ்ச்சியில் பங்கேற்க தேவையான ஆதரவு வழங்கப்பட்டது.
5. Foundation for Innovative Social Development ஏற்பாடு செய்த Empower Women for Climate Justice கலந்துரையாடலில் பங்கேற்றது.

6. 2024.07.31 மற்றும் 2024.08.01 அன்று சூரியகந்த பிரதேசத்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் உள்ளூர் மக்களுக்காக பாலின விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.
7. 2024.08.02 அன்று, Gender Club மாணவர்கள் பங்கேற்று கணேமுல்ல கல்வி வலயத்தை மையமாகக் கொண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தினர்.
8. 2024.08.13 அன்று, களனி பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் அனுசா எதிரிசிங்ஹ தலைமையில் சமூகப்பணி பட்டப்பாடநெறியின் முதலாம் ஆண்டு மாணவர்களுக்காக விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.
9. பாலினக் கல்வி மையத்திற்கு ஆலோசனை வழங்கும் களனி பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் அனுசா எதிரிசிங்ஹ தலைமையில் 2024.12.08 அன்று, Gender Club உறுப்புரிமை பெற்றுக்கொண்ட மாணவர்களுக்காக மேலும் ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

## பதிவாளர் பிரிவு

பதிவாளர் பிரிவு 2024 ஆம் ஆண்டில் இணையவழி ஊடாக் 162 மாணவர்களை பட்டப்பாடநெறிக்காக உள்ளீர்ப்பு செய்துகொண்டது. மேலும் சமூகப்பணி பட்டப்பாடநெறித் தேர்வுகள் மற்றும் ஆண்டு பட்டமளிப்பு விழா நடத்தப்பட்டன. இச்செயல்பாடுகளுக்காக ரூ. மி. 1.5 செலவிடப்பட்டது.

### நிறுவனத்தின் உள்நாட்டு பயிற்சிகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்கள்

| நிகழ்ச்சியின் பெயர் | பயிற்றுவிக்கப்பட்ட உத்தியோகத்தர் எணிக்கை | நிகழ்ச்சி நடாத்திய காலம் | மொத்த முதலீடு (ரூ.மி) | | நிகழ்ச்சியின் தன்மை (உள்நாட்டு/ வெளிநாட்டு | பெற்றுக்கொண்ட அறிவு/விளைவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாட்டு | வெளிநாட்டு | | |
| விடுப்பு ஆவணம் பராமரிப்பு தொடர்பான பயிற்சி | 01 | 02 நாட்கள் | 13,000.00 | | உள்நாட்டு | விடுப்பு தொடர்பான ஆவணங்களை பேணுதலும், உத்தியோகத்தர் விடுப்பினை துள்ளியமாக கணக்கிடுதல் மற்றும் ஓய்வு தொடர்பில் எழும் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளல் |
| களஞ்சிய நிருவாகம் தொடர்பான பயிற்சி | 01 | 02 நாட்கள் | 13,000.00 | | உள்நாட்டு | களஞ்சியப்படுத்தல் மூலதர்மங்கள் தொடர்பில் இற்றைப்படுத்தல், சரியானமுறையில் அறிக்கைகள், ஆவணங்களை பிழையின்றி பேணுதல், களஞ்சிய நிருவாகத்தில் எழும் பிரச்சினைகளை குறைத்துக்கொள்ள இயலுமாதல் |
| சம்பளப் பட்டியல் முறைமை (Payroll system) | 03 | 3 நாட்கள் | 30,990.00 | | உள்நாட்டு | சம்பளம் தொடர்பில் எழுந்த பிரச்சினைகளுக்கு, வரி அரவிடல் போன்ற பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள முடியுமாக இருத்தல் |
| தடைதாண்டல் பரீட்சை மற்றும் பயிற்சி | 13 | | 156,450.00 | - | உள்நாட்டு | சேவை செயற்திறன் மற்றும் சம்பள அதிகரிப்பினை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிட்டடியது |
| mindufulness பயிற்சி | 50 | ஒரு நாள் | - | - | உள்நாட்டு | கல்விச் செயற்பாடுகளை வெற்றிகரமாக நடாத்திச்செல்வதற்கு தேவையான உள ஒருமுகப்படுத்தல் முன்னேற்றல் |
| தர உறுதி செயல்முறையின் | 55 கல்விசார் ஊழியர்கள் | ஒரு நாள் | 610,431.00 | | உள்நாட்டு | கல்விசார் உத்தியோகத்தர் என்ற வகையில் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| முக்கியத்துவம் குறித்த ஒரு நாள் பயிலரங்கு மற்றும் கலந்துரையாடல். | | | | | | பாடநெறியின் தரத்தினை மேம்படுத்துவதன் ஊடாக தர உறுதி கொள்கைகளைப் பராமரிப்பதன் மூலமும் கற்பித்தல் திறன்களை மேம்படுத்துவதன் மூலமும் பாடநெறிகளின் தரத்தை மேம்படுத்துதல், நடைமுறைத் திறன்களை வளர்த்து அதற்கேற்ப செயல்பட முடியும். |
| நிறுவன மதிப்பாய்வு மற்றும் பாடநெறி மதிப்பாய்வு தொடர்பான பயிற்சி | 15 கல்விசார் உத்தியோகத்தர் கள் | ஒரு நாள் | 2880.00 | | உள்நாட்டு | புதிய பாநெறிகளுக்காக அனுமதியினை பெறும் நிகழச்சிகளுக்கு தேவைான தரச்சான்றிதழ் செயன்முறையை பேணுதல் |
| கற்பித்தல் முறைமை மற்றும் இணையத்தள வசதிகள் தொடரப்பான அறிவூட்டல் | 29 கல்விசார் உத்தியோகத்தர் கள் | ஒரு நாள் | 64,475.00 | | දේශීය | புதிய கற்பித்தல் முறைமை மற்றும் உலகத்தில் பயன்படுத்தப்படும் புதிய முறைக்ள தொடர்பிலான அறிவை இற்றைப்படுத்தல் |
| நிறுவன மதிப்பாய்வு வருகை தொடர்பாக தெளிவுபடுத்தல் | 75 உத்தியோகத்தர் கள் | එක් දින | 37,840.00 | | உள்நாட்டு | மதிப்பீட்டு வருகை நடைபெற்ற தினங்களில் நிகழ்ச்சியினை சிறப்புற செய்துகொள்ள உதவியளித்தல் |

# 03. இறுதிக்கணக்கு - 2024

**NATIONAL INSTITUTE OF SOCIAL DEVELOPMENT**
**STATEMENT OF FINANCIAL POSITION**
**AS AT 31ST DECEMBER 2024**
*(All amounts are in Sri Lankan Rupees)*

| | NOTE | 2024 | 2023 |
|---|---|---|---|
| **ASSETS** | | | |
| **Current Assets** | | | |
| Inventories | 01 | 1,303,271 | 1,454,025 |
| Prepayments | 02 | 505,004 | 736,559 |
| Staff Debtors | 03 | 12,330,377 | 13,093,816 |
| Receivables & Deposits | 04 | 6,821,217 | 13,440,371 |
| Invesment | 05 | 163,762,968 | 125,214,420 |
| Cash and Cash Equivalent | 06 | 11,635,301 | 23,693,937 |
| | | 196,358,139 | 177,633,129 |
| **Non Current Assets** | | | |
| Property, Plant & Equipment | 07 | 116,014,284 | 143,698,499 |
| **Intangible Assets** | | | |
| Student Information system & Networking | 08 | 3,289,586 | 509,440 |
| | | 119,303,870 | 144,207,939 |
| **Total Assets** | | 315,662,010 | 321,841,068 |
| **EQUITY AND LIABILITIES** | | | |
| **Current Liabilities** | | | |
| Refundable Deposits & Retention | 09 | 2,580,420 | 103,507 |
| Deferred Income (Pre Paid Course Fees ) | 10 | 140,000 | 2,716,500 |
| Accrued Expenses | 11 | 1,548,492 | 1,300,505 |
| | | 4,268,912 | 4,120,512 |
| **Non Current Liabilities** | | | |
| Loan | | | 2,000,000 |
| Employee Benefits | 12 | 35,650,123 | 31,663,462 |
| | | 35,650,123 | 33,663,462 |
| **Total Liabilities** | | 39,919,035 | 37,783,974 |
| **Net Assets** | | 275,742,975 | 284,057,094 |
| **Equity** | | | |
| Accumulated Fund | | 171,680,223 | 196,296,860 |
| Funds for scholership | | | 453,417 |
| Reserves | | 104,062,752 | 87,306,817 |
| **Net Equity** | | 275,742,975 | 284,057,094 |

These Financial Statements have been prepared in accordance with Sri Lanka Public Sector Accounts Standards. The accounting policies and notes pages on …1… to …29. form an integral and part of these Financial Statements.

E. H. Lasika Madhuwanthi
Accountant
National Institute of Social Development
Liyanagemulla, Seeduwa.

……………………………
**E.H.Lasika Madhuwanthi**
Accountant /Date
National Institute of Social Development.

The members of Council are responsible for the preparation and presentation of these Financial Statements

Malarmathy Gangatharan
Secretary
Ministry of Rural Development, Social Security and Community Empowerment
1st Floor, Stage II, Sethsiripaya
Battaramulla.

……………………………
**Malarmathy Gangatharan**
Secretary -
Ministry of Rural Development, Social Security and Community Empowerment.
Chief Accounting Officer.

……………………………
**Senior Professor Wasantha Subasinghe**
Director General (Acting)
National Institute of Social Development.
Accounting Officer.

……………………………
**H.L.Thisera.**
Member Governing Council of NISD.

Senior Professor Wasantha Subasinghe
Ph.D. (PBC)
Director General (Acting)
National Institute of Social Development
Liyanagemulla, Seeduwa.

7

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்**
**2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**நிதி செயலாற்றல் கூற்று**
*(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாவில்)*

| | NOTE | 2024 | 2023 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| சரக்கிருப்புக்கள் | 01 | 1,303,271 | 1,454,025 |
| முற்கொடுப்பனவுகள் | 02 | 505,004 | 736,559 |
| பதவியணி கடன்பட்டோர் | 03 | 12,330,377 | 13,093,816 |
| பெறவேண்டியவைகள் & வைப்புக்கள் | 04 | 6,821,217 | 13,440,371 |
| முதலீடு | 05 | 163,762,968 | 125,214,420 |
| | 06 | 11,635,301 | 23,693,937 |
| | | **196,358,139** | **177,633,129** |
| **கற்புலனாகா சொத்துக்கள்** | | | |
| சொத்துக்களும், உபகரணங்கள் | 07 | 116,014,284 | 143,698,499 |
| **கற்புலனாகா சொத்துக்கள்** | | | |
| மாணவர் தகவல் முறைமை | 08 | 3,289,586 | 509,440 |
| | | 116,014,284 | 143,698,499 |
| **மொத்த சொத்துக்கள்** | | **315,662,010** | **321,841,068** |
| **மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| மீளளிக்கத்தக்க வைப்புக்கள் & பிடிகாசு | 09 | 2,580,420 | 103,507 |
| மேலதிகமாக செலுத்திய கற்கைநெறிக் கட்டணங்கள் | 10 | 140,000 | 2,716,500 |
| அட்டுறுச் செலவினங்கள் | 11 | 1,548,492 | 1,300,505 |
| செல்வி டி.எஸ்.சீ. லத்திகா | 118,025 | 72,620 |
| திரு. ரீ. ராஜ்கமல் | 108,875 | 66,600 |
| திரு. யூ.எல்.கே.எஸ். பியசேன | 113,600 | 69,800 |
| திரு. டபிள்யூ.எல்.டி. பெரேரா | 113,600 | 69,800 |
| ஈ.எச்.எல். மதுவந்தி | 113,993 | 63,245 |
| டி.எம்.சி.ஜே. பண்டார | 71,850 | |
| கே.பி.ஆர்.எஸ் அசங்கிக்கா | 71,850 | |
| ஐ.எம்.எம்.கே. இஹலகெதர | 71,850 | |
| | **35,650,122** | **31,663,462** |

26

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்**
**2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**காசுப்பாய்ச்சல் கூற்று**
*(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாவில்)*

**பட்டியல் - 07 கட்டணம் செலுத்தப்பட்ட பாடநெறி வருமானம்**

| | 2024 | 2023 |
|---|---|---|
| யுனிசேப் நிகழ்ச்சித் திட்டங்கள் | | 1,065,031 |
| உ.ள. டிப்ளோமா ஹட்டன்/கண்டி/மட் 22/23 | | 1,310,000 |
| உளவள டிப். 21/23 ரண்ண, அம்பாறை | | 395,500 |
| உ.ள. டிப்ளோமா 2022/24 சீதுவை (சி/த/ஆ) | | 1,943,000 |
| உளவள டிப். 22/24 வவுனியா (த) | | 1,130,000 |
| DSWS 2022/24 சீதுவை | | 325,000 |
| DSWS 2023/25 சீதுவை | 330,000 | 410,000 |
| குறுங்கால நிகழ்ச்சிதி திட்டங்கள் | | 491,500 |
| EB பரீட்சை சமுர்தி உத்தியோகத்தர்கள் | | 524,625 |
| யப்பான் மொழி பாடநெறி | 290,146 | 5,688,022 |
| சமூகப்பணி முதுகலைமானி 23/25 (சி,த,ஆ) | 6,481,075 | 9,009,075 |
| உளவள டிப். 23/24 யாழ்ப்பாணம் | 1,752,025 | 1,847,975 |
| உளவள டிப். 23/25 சீதூவை (சி,த,ஆ) | 3,420,000 | 3,420,000 |
| உளவள டிப். 23/24 கிளிநொச்சி | 1,305,000 | 1,305,000 |
| உளவள டிப். 23/25 தலாவை | 1,229,000 | 1,410,000 |
| உளவள டிப். 19 /21 புத்தளம் | | 140,000 |
| ஆசிய பவுன்டேன் நிகழ்ச்சி- 2023 | | 2,100,000 |
| வெளிவாரி சமூகப்பணி இளமானி பட்டப் பாடநெறி சி,த,ஆ 24/25 | 600,000 | |
| ஆசிய ஆய்வு நிறுவனம் -SHUKUTO | 46,405 | |
| HALO TRUST | 234,375 | |
| EB பரீட்சை சமுர்தி உத்தியோகத்தர்கள் | 526,400 | |
| குறுங்கால நிகழ்ச்சிதி திட்டங்கள் | 404,000 | |
| சமூகப்பணி முதுகலைமானி 2024/26 சி,த,ஆ | 436,000 | |
| சமூகப்பணி முதுகலைமானி 2023/25 சி,த,ஆ | 9,853,000 | |
| உளவள டிப். 24 /25 திருகோணமலை | 664,800 | |
| உளவள டிப். 24 /25 அம்பாறை (சி) | 655,000 | |
| உளவள டிப். 24 /25 கண்டி(சி) | 1,496,000 | |
| உளவள டிப். 24 /25 யாழ்ப்பாணம் | 2,214,000 | |
| உளவள டிப். 24 /25 கிளி | 3,172,000 | |
| உளவள டிப். 24 /25 சீதூவை,தலாவை, குரு. | 3,782,000 | |
| உளவள டிப். 24 /25 அம்பாறை (த) | 1,067,000 | |
| உளவள டிப். 24 /25 சீதூவை (ஆ,த) | 4,209,000 | |
| சமுதாயச்சார் சீரிதிருத்த டிப்ளோமா பாடநெறி:DCBC ( குரு, மாத்,இரத்) | 125,000 | |
| ஆய்வியல் சான்றிதழ் பாடறெி | 200,750 | |
| பாலின ஆய்வுகளில் சான்றிதழ் | 615,400 | |
| சமூகப்பணி டிப்ளோமா 24/25 | 690,000 | |
| ஆங்கில டிப்ளோமா - 2024 | 697,000 | |
| | **46,495,376** | **32,514,729** |

27

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்**
**2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**காசுப்பாய்ச்சல் கூற்று**
*(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாவில்)*

| | | 2024 | 2023 |
|---|---|---|---|
| **பட்டியல் - 08 நிலையான வைப்பு வட்டி** | | | |
| எம்.எம். நசீர் குடும்ப நிதியம் | 143-6001-0000-3306-9 | 8,250 | 16,764 |
| டனியல் சான்ட்ரஸ் | | 23,293 | 38,278 |
| சுவர்ணா ஜயலத் | 20001-16-06956 | 1,372 | 3,015 |
| மக்கள் வங்கி நிலையான வைப்பு | | 10,971,417 | 18,053,736 |
| ராசநாயகம் மக்கள் வங்கி MSW | 143-6001-0000-2701-2 | 3,019 | 6,313 |
| ஆர் ஜயசிங்ஹ இம்ந்தி ருனாலி | 143-6001-0000-2153-3 | 2,063 | 3,972 |
| TG & MG மக்கள் வங்கி MSW | 143-6001-0000-2352-4 | 3,672 | 9,142 |
| | | **11,013,085** | **18,131,220** |

| | | |
|---|---|---|
| **பட்டியல் - 09 பெறக்கூடிய பாடநெறிக் கட்டணம்** | | |
| சமூகப்பணி முதுகலைமானி 2020/22 சி,த,ஆ | | 5,343,000 |
| சமூகப்பணி முதுகலைமானி 2021/23 சி,த,ஆ | | 6,296,200 |
| உளவள உயர் டிப். 21 /23 கொழும்பு (சி) | | 150,000 |
| உளவள டிப். 21 /23 அம்பாறை | | 194,000 |
| உளவள டிப். 21 /23 திருகோணமலை | | 124,000 |
| உளவள டிப். 21 /23 யாழ்ப்பாணம் | | 51,000 |
| உளவள டிப். 21 /23 கண்டி | | 22,100 |
| உளவள டிப். 23 /24 யாழ்ப்பாணம் | 240,000 | |
| உளவள டிப். 24 /25 யாழ்ப்பாணம் | 471,000 | |
| உளவள டிப். 24 /25 சீதூவை (ஆ,த) | 14,000 | |
| உளவள டிப். 24 /25 சீதூவை (சி,ஆ,த) | 1,859,500 | |
| உளவள டிப். 24 /25 கிளிநொச்சி | 1,341,000 | |
| சமூகப்பணி முதுகலைமானி 2022/24 சி,த,ஆ | 1,675,000 | |
| | **5,600,500** | **12,180,300** |

| | |
|---|---|
| **பட்டியல்- 11 NISD நிதிய வருமானம்** | |
| சமூகப்பணி டிப்ளோமா 21/22 | 111,400 |
| குறுங்கால நிகழ்ச்சிதி திட்டங்கள் | 10,000 |
| குறுங்கால நிகழ்ச்சிதி திட்டங்கள் | 20,000 |
| EB பரீட்சை சமுர்தி உத்தியோகத்தர்கள் | 3,300 |
| EB பரீட்சை சமுர்தி உத்தியோகத்தர்கள் | 4,840 |
| சமூகப்பணி முதுகலைமானி 2022/23 சி,த,ஆ | 725,000 |
| உளவள டிப். 22 /23 ரன்ன, அம்பாறை | 195,000 |
| உளவள டிப். 23 /24 சீதூவை | 1,290,000 |
| சமூகப்பணி முதுகலைமானி 2022/23 சி,த,ஆ | 625,000 |
| சமூகப்பணி முதுகலைமானி 2022/23 சி,த,ஆ | 650,000 |
| பாலின ஆய்வுகளில் சான்றிதழ் | 132,000 |
| ஆசிய ஆய்வு நிறுவனம் -SHUKUTO | 11,247 |
| சமூகப்பணி டிப்ளோமா 24/25 10% | 174,000 |
| குறுங்கால நிகழ்ச்சிதி திட்டங்கள் | 20,800 |
| உளவள டிப். 23 /24 கிளிநொச்சி | 486,000 |
| உளவள டிப். 23 /24 யாழ்ப்பாணம் | 720,000 |
| திறன்விருத்தி நிகழ்ச்சி | 31,200 |
| உளவள டிப். 24 /25 கிளிநொச்சி | 317,200 |
| உளவள டிப். 24 /25 தலாவை, குரு சிங்களம் | 756,400 |
| உளவள டிப். 23 /24 சீதூவை (சி,ஆ,த) | 532,600 |
| | **6,815,987** |

**28**

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்**
**2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**காசுப்பாய்ச்சல் கூற்று**
*(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாவில்)*

| | 2024 |
|---|---|
| **பட்டியல் - 11 திரட்டு நிதியம்** | |
| உளவள டிப். 21 /23 தலாவை | 25,000 |
| உளவள சான்றிதழ். 22 /23 தலாவை | 20,840 |
| சிறுவர்களை மையப்படுத்திய சான்றிதழ் பாடநெறி 2022 | 13,500 |
| சமூகப்பணி டிப்ளோமா 21/22 | 232,200 |
| சமூகப்பணி டிப்ளோமா 20/21 | 93,500 |
| சமூகப்பணி முதுகலைமானி 2021/22 சி,த,ஆ | 1,221,396 |
| சமூகப்பணி முதுகலைமானி 2020/21 சி,த,ஆ | 135,000 |
| உளவள டிப். 21 /23 யாழ்ப்பாணம் த | 42,276 |
| உளவள டிப். 21 /23 கண்டி த | 35,670 |
| உளவள டிப். 21 /22 குரு. சி | 156,178 |
| உளவள டிப். 20 /21 கிளி. | 145,910 |
| உளவள டிப். 20 /22 தலாவை | 157,541 |
| உளவள டிப். 20 /22 தலாவை | 88,150 |
| உளவள உயர் டிப். 21 /23கொழும்பு | 104,659 |
| 4ம் வருட 2023 - நிறுத்தப்பட்ட காசோலை வருமானம் 38 | (16,200.00) |
| 2023 -நிறுத்தப்பட்ட காசோலை வருமானம் 38 | (13,800.00) |
| தரச்சான்றிழம் - CQA (நிராகரிக்கட்ட காசோலை ) கலாநிதி. ரவீந்திர | (150,000.00) |
| உளவள உயர் டிப். 19 /21கொழும்பு பாடநெறிக் கட்டண மீள் செலுத்துனை ஐ.எம் இர்சாத் | 25,000 |
| 2022 & 2023 மஹபொல மீள்செலுத்தல் (வருகைதராத மாணவர்கள்) | 268,550 |
| காணி மற்றும் கட்டிடம் கையளித்தல் - ரன்ன | 26,804,948 |
| 2023 - நிறுத்தப்பட்ட காசோலை வருமானம் 38 | (4,500.00) |
| குறிப்பேடு - மடிக்கணினி - 2023/12/31 | (911,400.00) |
| பெறப்பட்ட பாதீடு 20/21 | 4,071,000 |
| பெறப்பட்ட பாதீடு 21/23 | 3,451,000 |
| முன்னைய ஆண்டு சரிப்படுத்தல் -நிலையான வைப்பு மீதி சரிபார்ப்பு | (38,742.72) |
| மேலதிக பாடநெறிக் கட்டண மிகை | 25,000,000 |
| சீதூவை கட்டிடம் (விங் பி) வலையமைப்பு | (3,338,269) |
| பாடத்திட்ட தயாரிப்பு செலவு | (649,605) |
| புலமைப் பரிசில் நிதியம் | (453,417) |
| திறைசேரியிலிருந்து பெறப்பட்ட கடன் | (2,000,000) |
| யுனிசெப் நிகழ்ச்சி செலவு | 650,000 |
| சமூகப்பணி டிப்ளோமா 22/24 | 21,080 |
| உளவள டிப். 22 /24 ரன்ன, அம்பாறை | 450,566 |
| உளவள டிப். 22 /24 ஹட்டன், கண்டி, மட்டக்களப்பு | 87,710 |
| உளவள டிப். 22 /23 சீதூவை (சி,த,ஆ) | 824,500 |
| உளவள டிப். 22 /23 வவுனியா | 216,783 |
| | **56,767,023** |

| | |
|---|---|
| **பட்டடியல் - 12 NISD நிதியச் செலவு** | |
| உளவியல்துறை பிரிவு | 37,322 |
| மானுடவியல் பிரிவு | 331,190 |
| சமூகவியல் பிரிவு | 138,040 |
| பட்டப்பின் படிப்பு நிலையம் | 970,000 |
| நூலக செலவு | 493,080 |
| மாணவர் நலன்புரி செலவு | 89,275 |
| பரீட்சை பிரிவு செலவு | 716,260 |
| பட்டமளிப்புச் செலவு | 780,000 |
| தரச்சான்றிதழ் செலவு | 2,884,675 |
| டிஜிடல்மயமாக்கல் செலவு | 602,181 |
| வாகனப் பராமரிப்பு | 1,446,237 |
| எரிபொருள் | 1,408,331 |
| ஏனைய சேவைகள் தலைமை அலுவலகம் | 900,000 |
| தேனீர் செலவு மற்றும் புகையிரத பற்றுச்சீட்டு செலவு | 275,587 |
| சீதூவை கட்டிடம் (விங் பி) வலையமைப்பு | 3,338,269 |
| பாடவிதான தயாரிப்புச் செலவு | 649,605 |
| | **15,060,051** |

**29**

# 04. கணக்காய்வார் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } එල්එස්ඩබ්/ඩී/එන්අයිඑස්ඩී/එෆ්එස්/2024

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2025 මැයි 26 දින

අධ්‍යක්ෂ ජනරාල් ,
ජාතික සමාජ සංවර්ධන ආයතනය

**ජාතික සමාජ සංවර්ධන ආයතනයේ 2024 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන සහ වෙනත් නෛතික හා නියාමන අවශ්‍යතා පිළිබඳව 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 12 වන වගන්තිය ප්‍රකාරව විගණකාධිපති වාර්තාව**

---

## 1. මූල්‍ය ප්‍රකාශන

### 1.1 තත්ත්වාගණනය කළ මතය

ජාතික සමාජ සංවර්ධන ආයතනයේ 2024 දෙසැම්බර් 31 දිනට මූල්‍ය තත්ත්ව ප්‍රකාශනය සහ එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය කාර්යසාධන ප්‍රකාශනය, හිමිකම් වෙනස්වීමේ ප්‍රකාශනය සහ එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා මුදල් ප්‍රවාහ ප්‍රකාශනය සහ ප්‍රමාණාත්මක ගිණුම්කරණ ප්‍රතිපත්තිවලට අදාළ තොරතුරුද ඇතුළත් මූල්‍ය ප්‍රකාශන වලට අදාළ සටහන් වලින් සමන්විත 2024 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154(1) ව්‍යවස්ථාව සමඟ සංයෝජිතව කියවිය යුතු 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ සහ 1971 අංක 38 දරන මුදල් පනතේ විධිවිධාන ප්‍රකාරව මාගේ විධානය යටතේ විගණනය කරන ලදී. ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154 (6) ව්‍යවස්ථාව ප්‍රකාරව මාගේ වාර්තාව යථා කාලයේදී පාර්ලිමේන්තුවේ සභාගත කරනු ලැබේ.

මාගේ වාර්තාවේ තත්ත්වාගණනය කළ මතය සඳහා පදනම කොටසේ විස්තර කර ඇති කරුණු වලින් වන බලපෑම හැර, ආයතනයේ මූල්‍ය ප්‍රකාශන තුළින් 2024 දෙසැම්බර් 31 දිනට මූල්‍ය තත්ත්වය සහ එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා එහි මූල්‍ය ක්‍රියාකාරිත්වය හා මුදල් ප්‍රවාහ ශ්‍රී ලංකා රාජ්‍ය අංශයේ ගිණුම්කරණ ප්‍රමිතිවලට අනුකූලව සත්‍ය හා සාධාරණ තත්ත්වයක් පිළිබිඹු කරන බව මා දරන්නා වූ මතය වේ.

### 1.2 තත්ත්වාගණනය කළ මතය සඳහා පදනම

(අ) සමාලෝචිත වර්ෂය තුළදී ඉදිරිපත් කර තිබූ මූල්‍ය ප්‍රකාශන තුළ වූ රු.120,718,042 ක වටිනාකමින් යුතු ජර්නල් සටහන් 35 ක් අසම්පූර්ණව සන්ලක්ෂය සඳහන් කිරීමෙන් තොරව ඉදිරිපත් කිරීම හේතුවෙන් එම ගණුදෙනුවල ගැලපුම් විස්තර පරීක්ෂා කිරීමට නොහැකි විය.

(ආ) සමාලෝචිත වර්ෂයට අදාළ ජාතික සමාජ සංවර්ධන ආයතනය සඳහා කාර්යාල උපකරණ මිලදී ගැනීම හා ගොඩනැගිල්ල ජාල ගත කිරීම (Networking) සඳහා වැය කරන ලද පිළිවෙලින් රු.649,605 ක් හා රු.3,338,268 ක වියදම් සමුච්චිත අරමුදලට ගලපා තිබුණි.

ශ්‍රී ලංකා විගණන ප්‍රමිතිවලට (ශ්‍රී.ලං.වි.ප්‍ර) අනුකූලව මා විගණනය සිදු කරන ලදී. මෙම විගණන ප්‍රමිති යටතේ වූ මාගේ වගකීම, මෙම වාර්තාවේ මූල්‍ය ප්‍රකාශන විගණනය සම්බන්ධයෙන් විගණකගේ වගකීම

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

எல்எஸ்டபிள்யு/டீ/என்ஐஎஸ்டி/எப்எஸ்/2024 2025 மே 26

பணிப்பாளர் நாயகம்,
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் வாசிக்கப்பட வேண்டிய, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் மூலம் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மை மற்றும் நியாயத்தினைப் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) மீளாய்வாண்டினுள் சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றில் இருந்த ரூபா. 120,718,042 பெறுமதியினைக் கொண்ட 35 பேரேட்டுக் குறிப்புகள் முழுமையுறக் குறிப்பிடாது சமர்ப்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் அந்தக் கொடுக்கல் வாங்கல்களின் சீராக்கல் விபரங்களைப் பரீட்சிப்பு செய்ய முடியவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்கான அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் கட்டடத்தில் வலையமைப்பினை அமைப்பதற்கு (நேவறுழசமைபெ) செலவிடப்பட்ட முறையே ரூபா. 649,605 மற்றும் ரூபா. 3,338,268 ஆன செலவு திரண்ட நிதியத்தில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்று கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்கும் நோக்கில் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சான்றுகள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என நம்புகின்றேன்.

### 1.3 கம்பனியின் 2024 ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த ஏனைய தகவல்கள்

இந்தக் கணக்காய்வு அறிக்கைத் தினத்திற்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட நிறுவனத்தின் 2024 ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள எனினும் நிதிக் கூற்று மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் எனக் கருதப்படும். இந்த ஏனை தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக் கூற வேண்டும்.

நிதிக்கூற்று தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாததுடன் நான் அது தொடர்பில் எதுவிதமான உத்தரவாதமோ அல்லது அபிப்பிராயமோ தெரிவிக்கவில்லை.

நிதிக்கூற்று தொடர்பான எனது கணக்காய்விற்கு உரியதாக, எனது பொறுப்பானது மேலே இங்காணப்பட்ட ஏனைய தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்குமிடத்து வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும்போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுடன் அல்லது கணக்காய்வில் அல்லது வேறு முறையில் பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவிற்கமைய போதியளவில் இணங்கவில்லையா என்பதனைப் பரிசீலனை செய்வதாகும்.

நிறுவனத்தின் 2024 ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கையினை வாசிக்குமிடத்து, அதில் போதியளவு தவறாக காட்டப்பட்டுள்ளது என நான் தீர்மானிக்கும் பட்சத்தில், திருத்தங்கள் செய்வதற்காக நிர்வாகத் தரப்பினர்களுக்கு அந்த விடயங்களைத் தெரிவித்தர் வேண்டும். மேலும் திருத்தப்படாது தவறாகக் காட்டப்பட்டவை காணப்படுமாயின், அவை அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் உரிய களக்காலத்தில் பாராளுமன்றத்தில சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

### 1.4 நிதிக்கூற்று தொடர்பில் முகாமைத்துவம் மற்றம் நிர்வாகத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக் கூற்று இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு ஏற்றவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தினைத் தொடர்ச்சியாக நடத்திச் செல்வதற்கான திறனை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன், முகாமைத்துவம் கம்பெனியை கலைப்பதற்குக் கருதினால் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாதவிடத்து செயல்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் எண்ணகிகரு அடிப்படையில் கணக்கீடு செய்தல் மற்றும் கம்பெனியின் தொடர்ந்து இயங்குவதற்கு உரியதான விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயல்பாடுகள் தொடர்பாகப் பரீட்சிப்பு செய்யும் பொறுப்பு, நிர்வாகத் தரப்பினரினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையினை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம்

கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக் கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மைத் தன்மை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. ஏன்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தா்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடா்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடா்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடா்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கிய கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிர்வாகத் தரப்பினரை தெளிவுபடுத்தியுள்ளேன்.

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது என்பதுடன், எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு நிறுவனத்தினால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணிச் செல்லப்பட்டிருந்தன.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்படுவதற்கு வேண்டிய எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே கம்பனியால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் கம்பனியின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதாக.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளை தவிர, கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் கம்பனி இணங்கியொழுகாதுள்ளமையை.

| சட்டங்கள், விதிகள் / ஒழுங்குகளுடனான தொடர்பு | அவதானிப்பு |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) 1644 | நாளாந்த ஓட்டக் குறிப்பு மற்றும் மாதாந்த சாராம்சம் என்பன அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு வழங்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தில் உள்ள 08 வாகனங்கள் தொடர்பில் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 1645 | வாகனங்கள் தொடர்பான லொக் குறிப்புப் புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 பந்தி | சகல எரிபொருள் பரிசோதனையின் பின்னரும் 12 மாத கால எல்லையின் பின்னர் அல்லது 25,000 கிலோ மீட்டர் தூரம் ஓட்டிய பின்னர் அல்லது என்ஜின் தொடர்பான திருத்த வேலையின் பின்னர் ஆகிய காரணங்களில் முதலில் ஏற்படும் சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனை செய்யப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தில் உள்ள 08 வாகனங்களுக்கு எரிபொருள் பரிசோதனை |

மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் வாகனங்கள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடும் நலிவுற்ற நிலையில் காணப்பட்டது.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவனம் அதன் அதிகாரம், தத்துவங்கள் மற்றும் கடமைகளுக்கு இணங்காத வகையில் செயலாற்றியுள்ளமை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் தவிர நிறுவனத்தின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், காலவரையறைகளினுள் உரிய சட்டங்களுக்கு இணங்கி பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காமை.

(அ) தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் கட்டடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா. 1,000 மில்லியன் திறைசேரி நிதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன் திட்டமிடல் மற்றும் நிர்மாணிப்பு (னுநளபைெ யனெ டிரடைவ) கொள்முதல் முறைமையின் கீழ் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்பந்த பெறுமதி ரூபா. 818,795 மில்லியனுக்கு (வட் மற்றும் நிச்சயமற்ற செலவுகள் தவிர்த்து) தொகைக்கு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்முதல் குழுவின் அனுமதிக்கு உட்பட்டு 2017 செப்டம்பர் 19 ஆம் திகதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு 2020 ஏப்ரல் 04 ஆம் திகதியில் நிறைவு செய்வதற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. கட்டடத்தினை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆண்டு வரையில் வருடாந்தம் பாதீட்டு திணைக்களத்தின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த மொத்த நிதி ரூபா.2,181.3 மில்லியன் ஆகும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டது.

(i) கட்டடத்தின் றபைெ டீ பகுதி வேலை முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டு இருந்த போதிலும் சுவர்களில் நீர் கசிதல், சுவர்களில் ஆங்காங்கே வெடிப்புகள், டைல் பதிக்கப்பட்ட இடங்களில் உயர வேறுபாடு அடைதல் உள்ளிட்ட கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய பல குறைபாடுகளுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ரூபா. 45.55 மில்லியன் தரையில் பதிக்கும் தரையோடுகளுக்கு செலவிடப்பட்டிருந்ததுடன் விலை மனுவுக்கமைய கொள்வனவு செய்யப்பட வேண்டிய தரையோடுகளுக்குப் பதிலாக வேறு வகை ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எட்டு சந்தர்ப்பங்களில் நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமை காரணமாகவும் இரண்டு சந்தர்ப்பங்களில் விலை தளம்பல் நட்டத்தினை நிகர் செய்த தாமதமடைந்த காரணத்தினாலும் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்தது. வகுப்புகளை நடாத்துவதற்கு இடவசதி இல்லாததனால் வேலைகள் நிறைவு செய்யப்பட்டிருக்காத றபைெ யு பகுதியின் முதலாவது மற்றும் இரண்டாவது மாடிகள் வகுப்புகளை நடத்துவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ii) 2014 ஒக்டோபர் 30 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதிக பரீட்சிப்புக்கு அமைய இரு கட்டட தொகுதிகளில் றபைெ டீ இல் தரைக்கு தரையோடுகளைப் பதித்தல் மற்றும் றுபைெ யு இல் மூன்றாவது மாடியில் 2,511.25 சதுர அடி அளவுக்கு தரையோடுகளைப் பதித்தல் (வுடைந) எஞ்சியிருந்தது. பதிக்கப்பட்டிருந்த தரையோடுகளில் (வுடைந) ஒரு சில இடங்களில் முடிவு வேலைகள் குறைந்த தரத்தில் காணப்பட்டன. விலைமனு விபரக் குறிப்புகளுக்கு அமைய பயன்படுத்தப்பட வேண்டிய செரமிக் தரையோடுகள் குறித்த தரத்தில் இல்லை எனப் பரீட்சிப்பு செய்யப்பட்டிருந்ததுடன் நியமங்களுக்கு இணங்காத மூலப்பொருட்களைப் பயன்படுத்தி பூர்த்தி செய்திருந்தமை தொடர்பில் கவனத்தில் கொள்ளாது ரூபா. 45.554 மில்லியன் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. ஒரு சில சுவர்களில் ஆங்காங்கே வெடிப்புகள் அவதானிக்கப்பட்டதுடன் 2021 திசெம்பர் 14 ஆம் திகதி விலை தளம்பலுக்கு இழப்பீடு செய்வதற்கு வழங்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய கணக்கீடு செய்யப்பட்ட விலைத் தளம்பல் ரூபா. 63.68 மில்லியன் ஆகும். (வட் சேர்க்கப்படாத) கட்டடம் நியமத்திற்கு இணங்கி

நிர்மாணிக்கப்பட்டிருக்காத போதிலும் அந்த விலைத் தளம்பல் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரையில் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அதில் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றினை எதிர்பார்க்கப்பட்ட வகையில் பெற்றுக் கொள்வதற்கு இந்த அறிக்கைத் தினம் வரையிலும் முடியாது இருந்தது.

(ஆ) சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் சமூக சேவைகள் வித்தியாலயம், செயலாளர் அலுவலகம் மற்றும் பயிற்சிப் பிரிவிலிருந்து சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்கள் உரிய கொடுப்பனவிற்காகப் பயன்படுத்துகின்ற மாணவர் கொடுப்பனவு வவுச்சர்கள் ீயலலைபெ ஏழரஉாநசள) பிரிவுகளில் இருந்து வேறு நிறுவனங்களுக்கு (பிரதேச மத்திய நிலையங்களுக்கு) வழங்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக வருமானம் முறையாக அறவிடப்படுதல், கணக்கீடு செய்தல் தொடர்பாகப் பரீட்சிப்பு செய்வதற்கு முடியாதிருந்ததுடன் குறித்த தரப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டிய வவுச்சர்களின் பிரதிகள் கணக்குக் கிளைக்கு வழங்கப்பட்டிருந்தன. வருமானத்தினைக் கணக்கீடு செய்யும் செயற்பாட்டுப் படிமுறை முறையாகப் பின்பற்றப்படாமை மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டுக் குறைபாடு காரணமாக வருமானத்தினைக் கணக்கீடு செய்வதில் முறைகேடுகள் நிகழ்வதற்கு இடம் ஏற்படுவதும் மாணவர்கள் இடை நடுவில் பாடநெறியைக் கைவிடுவதனால் பாடநெறிக்காக அறவிடப்படும் கட்டணத்தினை மீண்டும் செலுத்தும் போது சிக்கல் நிறைந்த நிலைமைகள் ஏற்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

## 3. ஏனைய விடயங்கள்

(அ) தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் நிதியத்திற்கு உரிய நிதியினைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் செலவிடல் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு நிதியத்துக்காக ஆரம்பிக்கப்பட்ட தனியான நடைமுறைக் கணக்கு ஒன்று இல்லாததுடன் அதற்காக தற்போது பேணப்பட்டு வருகின்ற நடைமுறை கணக்கின் மூலம் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அந்த கணக்கின் மூலம் பாடநெறிக்கான கட்டணங்களுக்குரிய அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் அறிக்கையிடப்படுவதுடன், நிதியத்துக்கு உரிய அனைத்து கொடுக்கல் வாங்கலும் அதன் மூலமே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவனத்தின் வருடாந்த பட்டமளிப்பு விழாவினை நடாத்துவதற்காக முற்பணமாக வெளி நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா. 120,000 மீளாய்வாண்டு இறுதி வரையிலும் தீர்க்கப் பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவனத்திற்குச் சொந்தமான மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா. 10,600,000 ஆன களனி மாணவர் விடுதி 2020 ஜூன் மாதம் தொடக்கம் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த பொருட்களுடன் அறிக்கையிடும் தினம் வரையிலும் செயலற்றுக் காணப்பட்டது. இந்த விடுதி பயன்பாடின்றி காணப்பட்ட காலம் 04 வருடங்களைக் கடந்திருந்ததுடன் அதில் எதுவிதமான பராமரிப்பு வேலைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதனால் விடுதி சேதமடைந்து காணப்பட்டதுடன் முகாமைத்துவத்தினால் இந்த சொத்துத் தொடர்பில் விரைவில் பொருத்தமான செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

ஜீ.எச்.டி.தர்மபால

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில் கடமை)

**<u>தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் 2024 ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்று மற்றும் வேறு சட்டரீதியானதும் ஒழுங்குபடுத்தற் தேவைகளும் குறித்த 2018ம் ஆண்டின் 19ம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12படி கணக்காய்வு அறிக்கை தொடர்பான கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கையின் உள்ளடக்கம் தொடர்பான பணிப்பாளர் நாயகத்தின் கருத்துக்கள் உள்ளடங்கிய அறிக்கை</u>**

**1.2 வரையறுக்கப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படைகள்**

(அ) 2024 ஆம் ஆண்டின் நிதி அறிக்கைகள் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கும் போது, பொதுக் கணக்கின் மென்பதிப்பு (soft copy) வழங்கப்பட்டதுடன், அதனுடன் தொடர்புடைய ஜர்னல் பதிவுகளின் 35 விபரங்களும் சான்றுகளுடன் வழங்கப்பட்டிருந்தன. மேலும், இவ்விபரங்களுக்கு தனித்தனி கோப்புகளாக ஆதார ஆவணங்களுடன் கணக்காய்வுக்காக வழங்கப்பட்டதையும், அவை தொடர்பான பிரச்சினைகளுக்கு அதிகபட்ச ஒத்துழைப்பு வழங்கப்பட்டதையும் இத்துடன் அறிவிக்கிறேன். இனி வரும் காலங்களில், அனைத்து பரிவர்த்தனை தொடர்பான அடிப்படைத் தகவல்கள் மற்றும் ஜர்னல் பதிவுகளை ஒழுங்குபடுத்தப்பட்ட நிதி அறிக்கைகளுடன் சமர்ப்பிப்பதற்கு நான் உறுதியளிக்கிறேன்.

(ஆ) இந்த ரூ. 649,605/- மற்றும் ரூ. 3,338,268/- செலவுகள் முறையே அலுவலக உபகரணங்கள், கணினிகள் வாங்குதல் மற்றும் சீதுவை Wing (B) கட்டிடத்தின் வலையமைப்புச் செய்தல் என்பவற்றுக்காக, ஆளும் சபையின் அங்கீகாரத்தின் கீழ் தேசிய சமூக அபிவிருத்தி நிதியிலிருந்து செலவிடப்பட்டன. இதற்கான செலவுகள் 38ஆம் இலக்க கணக்கின் மூலம் செலுத்தப்பட்டன. எங்கள் நிறுவனம் தனியே தேசிய சமூக அபிவிருத்தி நிதிக்காக கணக்கொன்றை பராமரிக்கவில்லை அதற்கான பரிவர்த்தனைகளும் 38ஆம் கணக்கின் மூலம் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன. இனி வரும் காலங்களில் தனித் தனியாக தேசிய சமூக அபிவிருத்தி நிதிக்காக கணக்கொன்றை தொடங்கி பராமரிக்கிறேன்

2.2.2 விதிமுறைகள் மற்றும் முகாமைத்துவ முடிவுகளை பின்பற்றாமை

(அ)

(i) நி.பி. 1644 – தினசரி ஓட்டப் பதிவுகள் மற்றும் மாதாந்த சுருக்கங்களை அடுத்த மாதத்தின் 10 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 2025 மே மாதம் முதல் சம்பந்தப்பட்ட பதிவுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படும்.

(ii) நி.பி. 1645 – நிறுவனத்தின் பொறுப்பில் உள்ள ஒவ்வொரு வாகனத்திற்கும் வாகன பதிவு புத்தகங்கள் (Log books) புதுப்பித்துக் கொள்ளும்படி வழிகாட்டப்பட்டு, அது நிறைவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(ஆ) 2016 டிசம்பர் 29 ஆம் தேதியிட்ட 30/2016 இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை, பிரிவு 3.1 படி,**

• 2025 ஆம் ஆண்டுக்கான எரிபொருள் தகண பரிசோதனைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.2.4

(அ) 2017 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரையிலான கட்டிட நிர்மாணப் பணிகளுக்காக ரூபாய் மில்லியன் 2181.13 திரைசேரி நிதியாக ஒதுக்கப்பட்டிருந்தது. கட்டிட நிர்மாணப் பணிகளுக்காக 2017.09.19 அன்று அரசுப் பொறியியல் கூட்டுத்தானத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு, 2017.10.04 அன்று உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. அதன்படி 2017 நவம்பர் மாதம் முதல் நிர்மாணப் பணிகள் ஆரம்பமானது. 2017 முதல் 2024 வரை கட்டிட நிர்மாணத்திற்கான திரைசேரி நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அரசுப் பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பித்த பற்றுச்சீட்டுக்கள், சான்றிதழ் வழங்கும் பொறியாளரின் அங்கீகாரம் கிடைத்த பின்பு அமைச்சினால் பணம் செலுத்தப்பட்டது. 2024 டிசம்பர் மாதத்திற்குள் சமர்ப்பிக்கப்பட்ட 63 பற்றுச்சீட்டுகளுக்காக கட்டணங்கள் அரசுப் பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தன.

(i) ராஜகிரிய கொஸ்வத்தப் பகுதியில் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடத்தில் இயங்கிவந்த நிறுவனம், 2020 ஆம் ஆண்டிலிருந்து சீதுவை பகுதியில் நிறுவுவதற்காக 2019.02.27 ஆம் தேதியிட்ட m.k.g.19/0045/132/005 அமைச்சரவைத் தீர்மானம் பெற்றிருந்ததால், முழுமையாக முடிக்கப்படாத சீதுவை லியனகேமுல்லையில் நிர்மாணிக்கப்பட்டுக்கொண்டிருந்த கட்டிடத் தொகுதியின் Wing B கட்டிடத்துக்கு நிறுவனம் மாற்றப்பட்டது. அதன்படி Wing B கட்டிடத்தை ஏற்க வேண்டியிருந்த போதிலும், அதில் காணப்பட்ட குறைகளைச் சரிசெய்யும்படி அரசுப் பொறியியல் கூட்டுத்தாபனத்திடம் தொடர்ந்து கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

தரைக்கு பதிக்கும் கற்கள் விலைமனுக்கோரல்களின்படி செராமிக் தரை பதிப்புக் கற்கள் வாங்கப்பட வேண்டியிருந்தது. ஆனால் 2020 முதல் 2022 வரையான காலத்தில் கட்டுமானப் பொருட்களின் விலை அதிகரிப்பும், பொருட்களின் பற்றாக்குறையும் ஏற்பட்டதன் காரணமாக, விலைமனுக்கோரல்களின்படிஅ குறிப்பிடப்பட்ட அதற்கு சமமான மாற்றுப் பொருட்கள் (equivalent substitutes) பயன்படுத்தி தரைத்தளம் அமைக்கப்பட்டது. கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வு மற்றும் இழப்பீடு தொடர்பாக 2021.02.06 அன்று வெளியிடப்பட்ட அ.ம.ப.21/2084/306/094 அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, அரசுப் பொறியியல் கழகம் சமர்ப்பித்த கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு, அதனை அடிப்படையாகக் கொண்டு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை அறிக்கையின் பேரில், 2024.07.09 அன்று வெளியிடப்பட்ட அ.ம.ப.24/1437/629/015 அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, ரூ மில்லியன் 63.68 (வரி இன்றி) கட்டணம் வழங்கப்பட்டது. மேலும், 2024.01.10 அன்று அரசுப் பொறியியல் கூட்டுத்தாபனம் சமர்ப்பித்த ஒப்பந்த கால நீட்டிப்பு கடிதத்தின் படி, விலை உயர்வுக்கான கட்டணம் வழங்கப்பட்ட பின் 4 மாதங்களுக்குள் கட்டுமானப் பணிகளை முடிப்பதாக அவர்கள் குறிப்பிட்டிருந்தனர். அதன்படி 2024 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் விலை உயர்வுக்கான கட்டணங்கள் வழங்கப்பட்டன.

கட்டிடத்திற்கு வழங்கப்பட்ட அடிப்படை மதிப்பீட்டிற்கு மேலதிகமாக, கட்டிடத் திட்டத்தை கல்வி நிறுவனம் பொருத்தமான முறையில் முன்னனி வடிவமைப்பையும் நில அளவுகளையும் மாற்றியமைத்தது. இதற்காக ரூ. 21.537 மில்லியன் செலவுக்கு அமைச்சரவைக் பத்திர எண் 19/0445/132/005 மூலம் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

2025.03.31க்குள் Wing A கட்டிடத்தின் தரைத்தளம் மற்றும் முதல் மாடியில் உட் பிரிப்புகளை செய்து கையளிக்குமாறு தேசிய பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டது. அதன்படி பிரித்து ஒழுங்கமைக்கப்பட்ட தளங்கள் கையளிக்கப்பட்ட உடனே நிர்வாகம், நிதி, கணக்கு மற்றும் பதிவாளர் பிரிவுகள் Wing A கட்டிடத்திற்கு மாற்றப்பட்டன. இதனால் Wing B கட்டிடத்தின் வெற்றிடமாகிய பகுதி மாணவர்களின் விரிவுரைகள் மற்றும் பிற செயல்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டது.

(II) 2022.03.15 அன்று தேசிய பொறியியல் கூட்டுத்தாபனத்தின் திட்டக் கட்டிடக் கலைஞர் வழியாக அனுப்பப்பட்ட (2017-65-02)A/011 எண்ணுடன் கூடிய கடிதத்தில் ரொசெல் டைல்களின் தட்டுப்பாடு மற்றும் டைல் உற்பத்தியில் உள்ள சிக்கல்கள், மேலும் நாட்டில் உள்ள அதிக கோரிக்கையினால் டைல் வழங்கல் தாமதமாக இருக்கும் என அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்புடையதாக, அமைச்சு நியமித்த தொழில்நுட்ப அதிகாரியின் பரிந்துரையை கருத்தில் கொண்டு, லங்கா டைல்களை அதனை ஈடாக்கும் மாற்றீடு (Equivalent) என அமைச்சரின் செயலாளரினால் ஒப்புதல் வழங்கப்பட்டது. நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் NISD/DA/SEEDUWA/2022 என்ற இலக்கத்துடன் கூடிய கடிதத்தின் மூலம், தரை அமைப்பிற்காக லங்கா டைல்ஸ் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி இரண்டாவது மற்றும் மூன்றாவது மாடியின் ஒரு பகுதியை லங்கா டைல்கள் பதிக்கப்பட்டது. இத்தகைய டைல்களுக்கு 2024 ஜூன் மாதத்திற்குள் கட்டணம் செலுத்தப்பட்டது. 2024 அக்டோபர் 30 அன்று நடைபெற்ற கணக்காய்வறிக்கையின் படி கண்டறியப்பட்ட குறைகளில், Wing B-இல் தரையில் டைல்கள் பதிக்கப்படாமல் இருந்த பகுதியும், Wing A-இன் மூன்றாவது மாடியில் டைல்கள் பதிக்கப்படாமல் இருந்த மீதமுள்ள சதுர அடிகள் அளவிலும் டைல்கள் முழுமையாக பொருத்தி பணி முடிக்கப்பட்டிருந்தது.

கட்டுமானப் பொருட்களின் விலைத் தளம்பளின் காரணத்தினால், பணம் செலுத்துவதற்காக அமைச்சரவை ஒப்புதல் பெற்ற பின்னர் விலை தளம்பளுக்கான பணம் செலுத்தப்பட்டது. கட்டுமான குறைகள் சரி செய்யப்படுவதற்கும், தரநிலைகளை பரிசீலிக்கவும் கட்டிடச் செலவுக் கணக்கில் பிடிகாசு வைக்கப்பட்டுள்ளது (Retention).

(III) கட்டிட வளாகத்தில் Wing B கட்டிடத்தை 2020 ஆம் ஆண்டிலிருந்து கல்வி மற்றும் நிர்வாக பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. Wing A கட்டிடத்தின் 3வது மாடியில் உள்ள மாநாட்டு மண்டபம் மற்றும் 2வது மாடியிலுள்ள ஒரு பகுதியைத் தவிர, ஏனைய அனைத்துப் பகுதிகளும் 2023 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆ) இதற்கான தகவலை தொடர்புடைய பிரிவுகளுக்கு வழங்கப்பட்டது. பிரதேச மையங்களுக்கு அனுப்பும் போது, பிரிவுக்க கையளிக்கப்பட்ட (Paying Voucher) புத்தகங்களை வழங்காமல், களஞ்சியத்தின் மூலம் பிரதேச மையங்களுக்கு அனுப்பும் விதமாக வழிகாட்டல் வழங்கப்பட்டன. மேலும், இதற்கான தகவல் தொடர்புடைய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டு, எதிர்காலத்தில் ஒரு புத்தகம் முடிந்தவுடன் அடுத்த புத்தகத்தை அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் எனும் வழிமுறைகள் வழங்கப்பட்டன.

3. பிற விடயங்கள்

(அ) இதுவரை தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் நிதிக்கான நடைமுறைக் கணக்கொன்று பேணப்படவில்லை. எதிர்காலத்தில், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் நிதிக்கான பரிமாற்றங்களுக்கு, ஆளும் சபையின் ஒப்புதலுடன் நடைமுறைக் கணக்கு தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) நிறுவனத்தின் வருடாந்த பட்டமளிப்பு விழா 2024 ஜூலை மாதத்தில் நடத்த திட்டமிடப்பட்டது. இதற்காக BMICHக்கு ரூ.120,000.00 முற்பணம் செலுத்தி நாள் ஒதுக்கப்பட்டது. ஆனால் பாடநெறியின் பரீட்சை மதிப்பெண்கள் வழங்கலில் ஏற்பட்ட குறைபாடுகளின் காரணமாக பட்டமளிப்பு தினம் 2024 அக்டோபர் வரை தள்ளப்பட்டது. 2024ஆம் ஆண்டு BMICHஇல் வேறு நாள் ஒதுக்க முடியாததால், தாமரைத்தடாக அரங்கில் பட்டமளிப்பு விழா நடத்த முடிவு செய்யப்பட்டது. BMICHக்கு செலுத்திய முற்பணம் மீண்டும் தரப்பட வேண்டுமென நிறுவனத்தின் பதிவாளர் வாய்மொழி மற்றும் எழுத்து மூலம் கோரினாலும், BMICH நிர்வாகம் அதை வழங்க முடியாததைத் தெரிவித்துள்ளது.

இ) நிறுவனம் 2020ஆம் ஆண்டில், சீதுவை லியன்கே முள்ள பகுதியில் நிறுவப்பட்ட போது, களனி விடுதியில் இருந்து மாணவர்களை வெளியேறி சீதுவை அருகில் தங்கி வந்தனர். 2020 மார்ச் மாதம் ஆரம்பமாகிய COVID-19 பெருந்தொற்றின் காரணத்தினால், நிறுவனத்தின் அனைத்து பாடங்களும் நிகழ்நிலை முறையில் நடைபெற்றன. 2022ஆம் ஆண்டில் களனி பிரதேச செயலகத்தின் தொழில்நுட்ப அதிகாரியினால் பெறப்பட்ட களனி விடுதி புதுப்பிப்பு பணிகளுக்கான செலவு மதிப்பீடு ரூ. 3.1 மில்லியன் என மதிப்பிடப்பட்டது.

ஆளும் சபையின் வழிகாட்டல்களின்படி, விடுதியினை நிறுவன ஊழியர்களுக்கு அல்லது களனி பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என 29/03/2023 மற்றும் 30/06/2023 திகதியிலமைந்த ஆளும் சபை அறிவித்தது. இதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது, ஆனால் ஊழியர்கள் அல்லது களனி பல்கலைக்கழக மாணவர்கள் நிவாஸம் பெறவில்லை.

அதற்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பணியாளர்கள் அல்லது களனி பல்கலைக்கழக மாணவர்கள் விடுதியில் தங்க வைக்கப்படவில்லை. அதனால், மீண்டும் ஆளும் சபைப் பத்திரம் எண் 62/04/2024 மூலம், போதியளவு குத்தகைப் பணத்திற்கு வேறு தரப்பொன்றுக்கு விடுதியை வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டது. ஆனால் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், கட்டிடத்தை பழுது பார்த்து தருமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அரசக் கணக்காய்வு மதிப்பீட்டின்படி கட்டிடத்தின் பெறுமதி ரூ. மில்லியன் 10.06 ஆக இருந்தது. மேலும், கட்டிடத்தைப் பழுது பார்க்க வேண்டிய செலவை கருத்தில் கொண்டு, ஆளும் சபை 2024.10.04 அன்று நடைபெற்ற கூட்டத்தில் விடுதியைச் சார்ந்த ஒரு விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தியது.அதன்படி, அந்த விரிவான அறிக்கை 2024.12.13 அன்று நடைபெற்ற ஆளும் சபை கூட்டத்தில், ஆளும் சபைச் பத்திரம் 144/12/2024 இன் மூலமாக சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர், 2025 ஆம் ஆண்டில் ஆளும் சபையின் உறுப்பினர்கள் மாற்றம் ஏற்பட்டதன் காரணமாக, மீண்டும் இதற்கான தீர்மானம் எடுக்க 2025 பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் நடைபெற்ற ஆளும் சபை கூட்டங்களுக்கு விடுதி தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

இதன்பின், 04/03/2025 அன்று நிறுவனம் நடத்திய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தில், அமைச்சின் கீழ் உள்ள முதியோர் செயலகம் அல்லது மாற்றுத்திறனாளிகளுக்கான செயலகம் பயனடைவதற்காக இந்த கட்டிடம் பயன்படுத்துவதற்கான சாத்தியத்தை ஆராய அறிவுறுத்தப்பட்டது. அதன்படி அந்த நிறுவனங்கள் கட்டிடத்தை ஆய்வு செய்தன. ஆனால் அதற்காக அவர்களிடமிருந்து கோரிக்கை இல்லாததால், 21/03/2025 அன்று 15/03/2025 ஆளும் சபைப் பத்திரத்தின் ஊடாக, சொத்து உரிமையை மீண்டும் உறுதிப்படுத்தி, சொத்து மதிப்பீடு செய்து, கட்டிடத்தை விற்று சீதுவையை அண்டியுள்ள பகுதியில் கட்டிடம் வாங்குவதற்கான தேவையை நியாயப்படுத்தி, தெளிவான அறிக்கை ஒன்றை உள்டக்கி அமைச்சரவைக்கு அமைச்சரவைக் குறிப்பொன்றை சமர்ப்பிக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டது அதற்குத் தேவையான அடிப்படை ஏற்பாடுகள் மேற்கொள்ளபட்டுவருவாதாக நான் குறிப்பிட்டுக்கொள்கிறேன்.

பேராசிரியர். டீ. ஏ. பிரேமகுமார த சில்வா
பணிப்பாளர் நாயகம் (ப.க)
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

**National Institute of Social Development**
Liyanagemulla,
Seeduwa,
Sri Lanka

Tel : +94 112 882 506 / 07
Fax :+94 112 882 502
E-mail : info@nisd.ac.lk
web : www.nisd.ac.lk